நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

01 - 31

# Saturday மெயில்

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin

01-05-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=



# அருந்ததி ரோய் நக்சலைட் ஆதரவாளரா?

இந்தியாவில் நக்சலைட்டுகளின் ஆயுதக் கிளர்ச்சியை அடக்குவதில் மத்திய அரசாங்கமும் பல மாநிலங்களின் அரசாங்கங்களும் பெரும் சவால்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் சதிஷ்கார் மாநிலத்தில் நக்சலைட் போராளிகளின் தாக்குதலில் 76 பொலிஸார் ஒரே இடத்தில் கொல்லப்பட்டதையடுத்து மத்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம் தமது பதவியை இராஜிநாமா செய்யமுன்வந்த போதிலும் அதை ஏற்க பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் மறுத்துவிட்டார்.நக்சலைட்டுகளின் அச்சுறுத்தலே இந்தியா தற்போது எதிர்நோக்கும் நெருக்கடிகளில் படுமோசமானது என்று பிரதமர் அடிக்கடி கூறிவருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இராணுவத்தைப் பயன்படுத்தி நக்சலைட்டுகளை ஒழிப்பதற்கும் மத்திய அரசாங்கம் விரும்புவதாக இல்லை. நக்சலைட்டுகள் செறிவாக இருக்கும் இடங்கள் மீது விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்துவது குறித்து பரிசீலிக்கப்படுவதாக அமைச்சர் சிதம்பரம் தெரிவித்த கருத்துக்கு அரசாங்கத்திற்குள்ளிருந்தே கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன.


பிரச்சினைகள் குறித்து நக்சலைட்டுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அரசியல் ரீதியான தீர்வுகளைக் காண்பதற்கு அரசாங்கத்துக்கு அக்கறையிருப்பதாக அறிவிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் நக்சலைட்டுகளினால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகள் சிக்கலை ஏற்படுத்தி விடுகின்றன.

(2ஆம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல்போன வெப்பத்தால் வரவிருக்கும் பேராபத்து



கடந்த சில ஆண்டுகளாக பூமி மேற்பரப்பில் நிலவிய வெப்பத்தை பூமி உள்இழுத்துக் கொண்டிருக்கிறது. அடுத்த சில ஆண்டுகளில் அது மீண்டும் வெளிப்பட்டு பூமிக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் கொலரோடாவைச் சேர்ந்த தேசிய காலநிலை ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் இது தொடர்பில் கூறியுள்ளதாவது; கடந்த 2003 இல் இருந்து பூமியில் நிலவிய வெப்பத்தைக் கணக்கிட்டு பார்த்ததில் ஒரு அதிர்ச்சி விடயம் தெரியவந்தது. இந்த ஏழு ஆண்டுகளில் பூமியில் ஏற்பட்ட வெப்பத்தின் ஒரு பகுதியைக் காணவில்லை. அது எங்கோ ஒரு இடத்தில் மர்மமாக மறைந்துள்ளது. இந்த வெப்பம் எங்கே மறைந்துள்ளது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு தற்போது நம்மிடமுள்ள கருவிகளில் போதிய வசதி இல்லை. இந்த ஆராய்ச்சி தவறாகவும் இருக்கலாம் அல்லது கடலின் மிக அதிக ஆழத்தில் இந்த வெப்பம் மறைந்திருக்கலாம். கடந்த ஆண்டு 'இ1 நினோ' என்று பெயரிடப்பட்ட கடல் நீர் வெப்பநிலை கூடிய விவகாரம் மறைந்திருக்கும் வெப்பத்தின் தாக்கமாகக் கூட இருக்கலாம். பூமியின் மேற்பரப்பிலுள்ள நச்சு வாயு சூரியனிடமிருந்து அதிக வெப்பத்தை ஈர்த்த வண்ணம் உள்ளது என செய்மதிக் கருவிகள் தெரிவிக்கின்றன.

பின்னொரு நாளில் இந்த வெப்பம் மீண்டும் வெளிப்பட்டு பூமிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதனால் கால நிலையிலும் பாதிப்பு ஏற்படலாம். எங்கோ ஒரு பகுதியில் மறைந்துள்ள இந்த வெப்பம் வெகு விரைவிலோ அல்லது சிறிது காலம் கழித்தோ வெளிப்படலாம். பனி மலை அடுக்குகள் உருகுவதன் மூலமாவோ கடல் நீர் மட்டம் அதிகரிப்பதன் மூலமாகவோ இந்த வெப்பம் வெளியாவதற்கு வாய்ப்பு உள்ளது.

---

**அருந்...**

(முன்பக்கத் தொடர்ச்சி)

நக்சலைட் இயக்கம் மாவோவாத கம்யூனிஸ்ட் கோட்பாட்டைப் பின்பற்றியே போராட்டங்களை நடத்தி வருகிறது. குறிப்பாக இந்தியாவின் கிழக்குப் பகுதி மாநிலங்களிலேயே நக்சலைட் போராட்டங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. பழங்குடிமக்கள் மத்தியலும் வறிய விவசாயிகள் மத்தியிலுமே நக்சலைட்டுகளுக்கு செல்வாக்கு இருக்கிறது. தங்களது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசாங்கங்களுக்கு அக்கறையில்லை என்பதை உணர்ந்து கொண்ட பழங்குடி மக்களும் வறிய விவசாயிகளும் நக்சலைட்டுகளுடன் இணைந்து ஆயுதப் போராட்டத்தின் மூலமாக விடிவு தேடிக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

இந்த மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் அடிப்படையில் தீர்வைக் காணமுயற்சிக்காமல் நக்சலைட்டுகளின் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவர இயலாது என்று இந்தியாவின் முக்கியமான புத்திஜீவிகளும் அரசியல் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்கள். நக்சலைட்டுகளினால் முன்வைக்கப்பட்டிருக்கும் இன்றைய அரசியல் பிரச்சினைகளுக்கு ஆதரவாக புத்திஜீவிகள் கருத்து வெளியிடுவது குறித்து அமைச்சர் சிதம்பரம் பகிரங்கமாகவே விசனம் தெரிவித்திருந்தார்.

நக்சலைட் பிரச்சினை தொடர்பில் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக எழுதியும் பேசியும் வரும் இந்திய புத்திஜீவிகளில் சர்வதேச புகழ் பெற்ற எழுத்தாளரான அருந்ததி ரோய் முக்கியமானவர்.

நக்சலைட்டுகளின் கட்டுப்பாட்டில் உள்ள காட்டுப்பகுதிகளுக்கு சென்ற நக்சலைட்டுகளுடனும் பழங்குடி மக்கள் மற்றும் வறிய விவசாயிகளுடனும் பிரச்சினைகளை ஆராய்ந்த அருந்ததி ரோய் இந்தியாவின் முக்கிய சஞ்சிகையொன்றில் "Walking with the comrades" (தோழர்களுடனான நடைப்பயணம்) என்ற தலைப்பில் நீண்ட கட்டுரையொன்றை அண்மையில் எழுதியிருந்தார்.

சதிஷ்கார் மாநிலத்தின் டந்தேவாடா மாவட்டத்தின் பெரும் பகுதி நக்சலைட்டுகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. இந்தப் பகுதிகளுக்குச் சென்று பல நாட்கள் தங்கியிருந்து நிலைவரங்களை ஆராய்ந்த அருந்ததி ரோய் தனது அனுபவங்களை அந்த கட்டுரையில் விபரித்திருக்கிறார்.

இத்தகையதொரு கட்டுரையை எழுதியமைக்காக அருந்ததி ரோய் மீது சதிஷ்கார் மாநில பொது மக்கள் விசேட பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரமுடியுமா என்பது குறித்து மாநில பொலிஸார் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. சதிஷ்கார் மாநில பொலிஸ் இயக்குநர் நாயத்துக்கு அருந்ததி ரோய் தொடர்பில் முறைப்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆனால், கட்டுரையொன்றை எழுதியமைக்காக அருந்ததி ரோய்க்கு எதிராக மேற்கொள்ளப்படக்கூடிய எந்தவொரு சட்டநடவடிக்கையுமே கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பறிப்பதற்கான முயற்சியாகவே இருக்கும் என்று மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூகத்தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகள் குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

36 பேர் இது தொடர்பில் கைச்சாத்திட்டு அறிக்கையொன்றையும் வெளியிட்டிருக்கிறார்கள்.இதில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்காக குரல் கொடுக்கும் அருணா ரோய், வழக்கறிஞர் பிரசாந் பூஷண், பொருளியல் நிபுணர் ஜீன் ட்றெஸ், முன்னாள் கடற்படைத்தளபதி ஆர்.எச். தஹிலியானி,தகவலுக்கான உரிமை ஆர்வலர் அரவிந்த் கெஜ்றிவால், சுற்றாடலியலாளர் வந்தனா சிவா ஆகியோரும் அடங்குகின்றனர்.

'அருந்ததி ரோய் எழுதிய விடயங்களை ஒருவர் ஏற்றுக் கொள்கிறாரோ இல்லையோ அது வேறுவிடயம், ஜனநாயக நாடு என்று பெருமையாக வர்ணிக்கப்படுகின்ற இந்தியாவில் அத்தகைய கருத்துகளை சுதந்திரமாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துவதற்கு நிச்சயம் அனுமதித்தேயாகவேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாவோவாதப் போராளிகளின் நோக்கங்கள் எவை? அவர்களது போராட்ட இயக்கம் எவ்வாறு வளர்ந்துவந்திருக்கிறது? அத்தகைய போராட்ட இயக்கமொன்று உருவாவதற்கான அடிப்படைக் காரணங்கள் எவை? அந்த இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்தின் விளைவாகத் தோன்றியிருக்கின்ற சவால்களை எதிர் கொள்வதற்கு கையாள வேண்டிய அணுகுமுறைகள் எவை? இந்தக் கேள்விகளுக்கான விடைகளை அறிவுபூர்வமாகவும் அசவுணர்வுகளுக்கு அப்பாற்பட்டும் ஆராய்ந்து நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டியதும் அவற்றை மக்கள் விளங்கித் தெரிந்து கொள்ள வேண்டியதும் முக்கியமானதாகும்' என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பெருமளவு மக்கள் அருந்ததி ரோயை ஆதரிக்கிறார்கள். அவருக்கு எதிராக மேற்கொள்ளப்படக்கூடிய எந்தவொரு பொலிஸ் நடவடிக்கையுமே மாற்றுக்கருத்துகளை ஒடுக்குவதற்கான முயற்சியேயாகும். மாற்றுக்கருத்தொன்று விவேகமான முறையில் முன்வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அரசாங்கம் தடுமாற்றமடைந்திருக்கிறது.தற்காப்புக்கான கூட்டு நடவடிக்கையை ஆதரித்து அருந்ததி ரோய் துணிச்சலுடன் ஆதரித்து தனது கருத்துகளை வெளிப்படுத்தியிருக்கிறார். பல மனித உரிமை ஆர்வலர்கள் வெளிப்படுத்துவதற்கு தயங்கிய விடயங்களை அருந்ததி ரோய் தனது கட்டுரையில் தெளிவாக முன்வைத்திருக்கிறார் என்று பிரபல வழக்கறிஞர் கொலின் கொன்சால்வ்ஸ் தெரிவித்திருக்கிறார்.

அருந்ததி ரோய்க்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியில் பாசிசத் தன்மை இருக்கிறது. இந்தவகையான எழுத்தை குற்றமாக்குவது பாசிசத்தின் தெளிவான அறிகுறியே என்று பிரஷாந்த் பூஷண் குறிப்பிட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் கடத்தல்கள் பீதியில் மாணவர்கள்



இழந்த கல்வியை மீளப்பெறுதல் என்ற முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இவ் வேளையில் யாழ்.குடாநாட்டுக் கல்வித்துறை மீது கடந்த சில வாரங்களாகப் பாரிய இடி வீழ்ந்திருக்கின்றது.

'பாடசாலைகளுக்குச் செல்கின்ற மாணவர்கள் கடத்தப்படுகிறார்கள்' என்ற செய்தியால் மாணவர்கள் கதிகலங்கி நிற்கிறார்கள். பிள்ளைகளின் கல்வி தொடர்பில் பெற்றோர்கள் உறைந்து போயுள்ளனர்.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் எமது யாழ்.மாவட்டம் கொழும்பிற்கு அடுத்த நிலையில் கல்வியில் சிறந்து விளங்கியது. ஆனால், 30 ஆண்டுகள் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகள் கல்வியில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தின. ஆனால், யுத்த காலத்தில் கூட அரசு விதித்த பொருளாதாரத் தடை உட்படப் பல்வேறு தடைகளையும் தாண்டி குடாநாட்டு மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கினர்.

விடுதலைப் புலிகள் தமது அமைப்பிற்கு மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு அப்போது சில இடங்களில் முன்வைக்கப்பட்ட போதிலும் பாடசாலைகளில் இடம்பெற்ற கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை அது பெருமளவில் பாதிக்கவில்லை.

ஆனால், கடந்த சில வாரங்களாகக் குடாநாட்டில் மாணவர்களைக் கடத்தும் சம்பவங்கள் அரங்கேறி வருவதால் குடாநாட்டுக் கல்வி செயற்பாடுகளில் பாரிய தடங்கல் ஏற்பட்டுள்ளது.

'வெள்ளை வான்' மற்றும் 'மோட்டார் சைக்கிள்' போன்ற வாகனங்களில் வருகின்ற இனந்தெரியாத நபர்கள் பாடசாலை மாணவர்களைக் கடத்த முற்படுகிறார்கள். கடத்திச் செல்கிறார்கள் என்ற பீதியே இன்று குடாநாடு முழுவதும் பரவியுள்ளது.

கோண்டாவில், சங்குவேலி, மயிலங்காடு, மீசாலை மேற்கு, மட்டுவில்மத்தி, சுன்னாகம் மற்றும் பண்ணாகம் போன்ற இடங்களில் பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் கடத்தப்பட முயற்சிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கோண்டாவிலில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்களும் ஏனைய இரு இடங்களிலும் ஹை-ஏஸ் [வெள்ளை வான்] வானில் வந்தவர்களும் இந்தக் கடத்தல் முயற்சியில் ஈடுபட்டதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். குடாநாட்டின் ஏனைய இடங்களிலும் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்படாத பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாணவர்களையும் பெற்றோரையும் பீதிக்குள் ஆழ்த்தியுள்ள இக்கடத்தல் முயற்சிகள் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது; 'தென்மராட்சியில் கபில்நாத் என்ற மாணவன் கடத்திக் கொலை செய்யப்பட்டமை, நவாலியில் மாணவன் [சிறுவன்] ஒருவன் கடத்தப்பட்டுத் தப்பியமை தொடர்பான இரண்டு சம்பவங்களைத் தவிர வேறெந்த உறுதிப்படுத்தப்பட்ட சம்பவங்களும் குடாநாட்டில் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் இல்லையென்று கூறுகின்றனர்.

நவாலியில் தனது வீட்டுக்கு அண்மையில் நின்ற பாடசாலைச் சிறுவன் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டு நாக்கில் மயக்க ஊசி போடப்பட்ட போதும் அவன் மயங்காமல் அவர்களின் பிடியிலிருந்து தப்பியிருக்கின்றான். வெள்ளை வானில் இருந்தவர்கள் பிஸ்டல்கள் வைத்திருந்ததையும் மேலும் சில சிறுவர்கள் வானுள் இருந்ததையும் தான் கண்டதாக அச்சிறுவன் தனது முறைப்பாட்டில் கூறியிருக்கின்றான்.

இந்நிலையில் 51 ஆவது படைப்பிரிவின் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சரத் விஜயசிங்க கடந்த புதன்கிழமை யாழில் நடத்தி ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இக் கடத்தல் முயற்சிகளுக்கும் இராணுவத்திற்கும் எந்தத் தொடர்புமில்லையென்று கூறியிருக்கின்றார்.

அண்மையில் நவாலி வெளிப்பகுதியில் சென்றுகொண்டிருந்த இருவரைக் கடத்தி வைத்துக்கொண்டு கப்பம் கோரிய வேளை கைது செய்யப்பட்டவர்கள் [illegible] பொதுமக்களே என்பதைச் சுட்டிக்காட்டிய அவர் இதற்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கும் எந்தத் தொடர்புமில்லையென்றும் உறுதிபடக் கூறுகின்றார்.

கடத்தல் முயற்சிகள் இடம்பெறுகின்றமை அல்லது அதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தொடர்பாக 0212222267, 021 2223398 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தெரியப்படுத்துமாறும் கூறியிருக்கின்றார்.

மேலும் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து திடீர் வீதிச் சோதனைகளை நடத்துவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எது எப்படியிருப்பினும் யுத்தம் நீங்கி ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.குடாநாடு பல்வேறு மாற்றங்களுக்கும் தாக்கங்களுக்கும் உட்பட்டு வருகின்றது.

பாடசாலைச் சிறுவர்களைக் கடத்தும் முயற்சிகளுக்கு அப்பால் ஏனையவர்களைக் கடத்துவதும் யுவதிகளைக் கடத்திக் கொலை செய்வது, பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்துவது போன்ற சம்பவங்களும் குடாநாட்டில் அரங்கேறி வருகின்றன.

பெரும் பின்புலம் ஒன்று இல்லாமல் இவ்வாறான எந்தவொரு செயற்பாடும் இடம்பெறமாட்டாது என்பதே பொதுமக்களின் கருத்தாக இருக்கின்றது. அந்தப் பெரும் பின்புலம் எது என்பதை உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. நாட்டில் யுத்தம் நீங்கி விட்டது. சமாதானத்தைத் தோற்றுவித்து விட்டோமென்று உலகம் பூராவும் அரசு பறை சாற்றிக் கொண்டிருக்கின்றது. ஆனால், குடாநாட்டு மக்கள் இன்று வரை நிம்மதியிழந்தவர்களாகவே உள்ளனர். எனவே, இவ் விடயத்தில் உடனடியாக அரசு கவனம் செலுத்த வேண்டும்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு ஊடகப் போராளியின் மறைவு

சமூக அநீதிகள், கலை பண்பாட்டு சீரழிவுகளுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் விடிவு பெற்றிட வேண்டுமென்பதற்காகவும் பல்வேறு சவால்களையும் சதிகளையும் மிரட்டல்களையும் எதிர்கொண்டு எதற்கும் சளைத்திடாது பேனா முனை கொண்டு போராடிய ஊடகப் போராளியான செல்வரத்தினம் ரூபன் இன்று எம் மத்தியில் இல்லை என்பதை ஜீரணிக்க முடியாதுள்ளது.

செல்வரத்தினம் ரூபன் (32 வயது) யாழ். தினக்குரலில் உதவி ஆசிரியராக பணியாற்றி வந்த நிலையில் கடந்த 25 ஏப்ரல் 2010இல் காலமானார்.

ரூபனின் ஊடகப்பணி சவால்கள் நிறைந்ததும் கொலைகள் மலிந்ததுமான காலப்பகுதியில் யாழ்.தினக்குரல் ஊடாகவே ஆரம்பமானது. பண்பான பேச்சு, பணிவான குணம், சிறிது நேரத்திலேயே எவரையும் கவர்ந்துவிடும் ஆற்றல் கொண்ட ரூபனிடம் சமூக சீரழிவுகள், தமிழ் மக்களின் அவல வாழ்வுகள் தொடர்பான ஆக்ரோஷமான கருத்துகள் புதைந்திருப்பதையும் நாம் சிறிது நாட்களுக்குள்ளேயே தெரிந்து கொண்டோம்.

யாழ்.குடாநாட்டில் ஊடகத் துறைக்கு சவால் விடப்பட்டிருந்த காலம் அது. ஊடகவியலாளர்கள் நாய்களைப் போல் வீதிகளில் வைத்து கொல்லப்பட்ட நேரம் அது. ஊடகங்கள் தமது செயற்பாடுகளை நிறுத்த வேண்டிய நிலைமை. அச்சடிக்கும் பத்திரிகைகளை விநியோகிக்க முடியாத பயங்கரம். ஆனால், அனைத்துக்கும் சவால் விட்டு நெருக்கடியான காலகட்டத்திலும் ஊடக வெளியீட்டுக்கு உயிரூட்டியவர் ரூபன்.

விநியோகிக்கக் கொண்டு செல்லப்படும் பத்திரிகைகள் தீயிடப்பட்டன. விநியோகிப்பவர்கள் தாக்கப்பட்டனர். இதனால் பத்திரிகை விநியோகம் தடைப்பட்ட போது அப் பணியை தன்தலைமேல் போட்டுக் கொண்ட ரூபன், தனது மோட்டார் சைக்கிளில் செல்லாத குச்சொழுங்கைகளும் குறுக்கு வீதிகளும் கிடையாது. சில இடங்களில் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவங்களையும் ரூபன் சந்தித்திருந்தார்.

ஊடகவியலாளர்கள் என்ற பெயரைப் பயன்படுத்திக் கொண்டு எத்தனையோ பிரகிருதிகள் தமது வாழ்க்கையை வளமாக்க வெளிநாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் சென்ற போது உண்மையான ஊடகப் போராளியாக, சவால்களுக்கு மத்தியில் மக்களுடன் நின்று ஊடகச் சமராடி முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் ரூபன். தினக்குரலின் சகோதர வெளியீடான '*Saturday*மெயில்' பத்திரிகையை நாம் குடாநாட்டில் வெளியிட்டபோது அதில் தனது பங்களிப்பை பெருமளவில் ரூபன் செலுத்தினார். இதே பக்கத்தில் 'செ.சக்திதாசன்' என்ற பெயரில் வெளிவந்த கட்டுரைகள் ஏராளம். ஒவ்வொன்றிலும் மக்கள் நலன், கலாசார சீரழிவுகள் தொடர்புபட்ட விடயங்களே தொக்கி நிற்கும். கட்டுரைகளில் மட்டுமன்றி கவிதைகளிலும் கைதேர்ந்தவர் ரூபன்.

ரூபன் சுகவீனமுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது கூட அங்கிருந்தவாறு தனது கட்டுரைகளை எழுதினார். அவரின் நிலைமை மோசமடைந்து கொண்டுவந்த நிலையில் தான் மரணிப்பதற்கு முதல் தினத்திற்கான கட்டுரையை தனது சகோதரி மூலம் எழுதி அனுப்பிவைத்திருந்தார். அவரின் இறுதிக் கட்டுரை போரில் பாதிக்கப்பட்ட பெண்களின் அவல வாழ்வு தொடர்பானதாகவே இருந்தது. ரூபனின் கட்டுரை 24 ஆம் திகதி *Saturday* மெயிலில் வெளிவந்தது. ரூபனின் உயிர் 25 ஆம் திகதி பிரிந்தது.

ரூபன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது நான் தொலைபேசி மூலம் அவருடன் தொடர்புகொண்டேன். அவர் யாருடனும் தொலைபேசியில் உரையாடமுடியாத உடல்நிலை.ஆனால் எனது பெயரைக் கூறியதும் தனது உடல் நிலையை பொருட்படுத்தாது சுமார் 15 நிமிடங்கள் உரையாடினார். நான் அவரிடம் கேட்டது உடல் நிலை. ஆனால் அவரோ என்னுடன் பேசியது அடுத்த முறை கட்டுரை எழுதுவது எப்படி என்பதுபற்றி.


ரூபன் என்னிடம் இறுதியாகக் கூறியது 'அண்ணா என்னைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். எனக்கு ஒன்றும் நடக்காது. நான் விரைவில் குணமடைந்து விடுவேன். ஏனெனில் இங்கு தற்போது நடக்கிற பிரச்சினைகள் பற்றி இன்னும் நிறைய எழுத வேண்டியிருக்கு. அதனால் நான் விரைவில் குணமடைந்து விடுவேன்'. ஆனால், இறுதிவரை தான் கூறியவற்றை மிகவும் நேர்த்தியாக நிறைவேற்றி வந்த ரூபன் இந்த விடயத்தில் மட்டும் எம்மை ஏமாற்றிவிட்டார்.

இறுதி மூச்சுவரை ஊடகப் பணி தொடர்பாகவே பேசிக் கொண்டிருந்த ரூபனின் அர்ப்பணிப்புமிக்க பங்களிப்பு யாழ்.தினக்குரலினதும் சகோதர வெளியிடான *Saturday* மெயிலினதும் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. இறுதி வரை ஊடகப்போராளியாகச் செயற்பட்ட ரூபனின் மறைவு தினக்குரல் குடும்பத்துக்குப் பேரிழப்பாகவேயுள்ளது.

இன்று ரூபனின் பிறந்த தினம் என்பது வேதனையை இன்னும் அதிகரித்துள்ளது.

பா.கிருபாகரன்,
உதவி ஆசிரியர்
தினக்குரல், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நோயின் அறிகுறி தென்படாமல் நோயை பரப்பும் நோயாளிகள்

நோய்த் தொற்றுக்குள்ளானவரில் நோய் கருத்தக்க அறிகுறிகளை ஏற்படுத்தாது விடுவதால் இந்நோயாளிகளைக் குணப்படுத்த முற்படுவதற்கு முன்பே அவை மாறிவிடுவது போன்று தென்படும். உதாரணமாக வலியற்ற புண்கள் உருவாகின்ற போது அதற்கு மருந்துபோட எத்தனிப்போர் மிகக்குறைவு. அவையும் சில நாட்களில் காய்ந்துவிடும் என்றால் அது பற்றிக் கணக்கில் எடுப்பவர்களின் எண்ணிக்கையை விரல்விட்டுத்தான் எண்ண வேண்டும்.

உதாரணமாக அண்மைக் காலத்தில் Facebook இணையத்தளத்தில் அறிமுகமில்லாத பாலியல் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு பாலியல் செயல்பாடுகளில் ஈடுபட்ட பெரும்பாலான இளைஞர்,யுவதிகள் சிபிலிஸ் நோயால் தாக்கப்பட்டனர் என்றும் செய்தி பத்திரிகையில் வெளியானது. இங்கு சிபிலிஸ் நோயின் சில சிறப்பியல்புகள்தான் இவர்களை இவ்வாறு பாதித்தது என்று கூறினால் மிகையாகாது.

இவர்களைப் பொறுத்தவரை மருத்துவ அறிவு, மருத்துவ வசதிகள் மிகவும் வளர்ந்த நாடுகளில் வாழ்பவர்கள். இவர்கள் தாமாகவே பாலியல் நோய் தொடர்பான சோதனைகளை முன்வந்து செய்வதற்கு உரிய மனோபாவம் கொண்டவர்கள். எமது சமூகத்தில் எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய் தாக்கியவர்களை இனங்காண சுறுசுறுப்புடன் மருத்துவத்துறை திரையிடல் (Screening) செய்வதும் இல்லை. இல்லாதவிடத்து நோய் பற்றி அச்சமுடையவர்கள் நோய் ஏற்பட்டுவிட்டதாக என அறிந்து சிகிச்சை பெற்று மாற்றிக்கொள்ளக் கூடிய நோய்களைக்கூட இனங்காணக்கூட முற்படுவதில்லை.

இங்கு சிபிலிஸ் Syphilis நோய் இது நாட்பட்ட நோயாகவே காணப்படும். இதனை இளநிலையிலேயே இனங்கண்டு உரிய சிகிச்சையளிப்பின் அதன் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

இந்நோய்களை நோய்க் கிருமிகள் தொற்றி முதன்மை நிலையில் (Primary stage) இல் இலிங்க உறுப்பில் சிறிய கொப்புளங்கள் உருவாகும். இவை சிறிய புண்ணாக மாறும். இப்புண்கள் வலியற்றவை. கொப்புளங்களும் வலியற்றவை. இவற்றைவிட தொடைப்பகுதியில் நெறிக்கட்டிகளும் உருவாகும். இவையும் வலியற்றவை. இவையெல்லாவற்றையும் விஞ்சி இப்புண்கள் இரண்டு,மூன்று நாட்களில் காய்ந்து போய் விடும். எனவே, வலியற்ற புண்,வலியற்ற நெறிக்கட்டிகள் இவையெல்லாம் இரண்டு நாட்களில் மாறிவிட்டன என்றால் நோயாளி மனதில் பயத்தின் வலியும் வலியற்றதாகவே யிருக்கும். நோயாளிகள் இவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவார்கள். இதன் பின் இரண்டாம் நிலை (Secondary Stage) இல் சிறிய காய்ச்சல், தொண்டைக்கரப்பு,உடல் அசதியாக இருத்தல் இப்படியென்றால் நோயாளிகள் இவற்றையும் கணக்கிலெடுப்பார்கள் என்று சொல்லவே முடியாத நிலை தான் காணப்படும்.

மொத்தத்தில் இந்த நிலைகள் யாவற்றிலும் நோயாளிக்கு நோய் ஏற்பட்டிருப்பதாக உணரக்கூடிய அளவில் அறிகுறிகள் தென்படவில்லை என்று சொன்னால் ஏற்றுக்கொள்ள வேண்டித்தான் இருக்கும். ஆனால், இந்த நிலையில், நோயானது ஏனையோருக்குக் கடத்தப்படுவது நடைபெறாமல் போகவில்லை. இந்நிலையில், குறித்த நோயாளி சுகதேகி போன்று தென்படுவதால் உடலுறவில் ஈடுபடுபவரும் நோயை இனங்காணமாட்டார். இவ்வேளையில் தானும் நோயைப் பகிர்ந்து கொள்வார்.

இந்நோயின் பிந்திய நிலையில் Late Stage இல் உடல் அங்கங்களிலும் மூட்டுகளிலும் மற்றும் நரம்புகளினூடு பரவி மூளைக் காய்ச்சல் இதயத்தில்,வால்வுகளில் சீரற்றதன்மை. இவற்றை விடச் சிறுநீரகங்களிலும் தாக்கங்களை உருவாக்கி மரணத்தை உண்டு பண்ணுகின்றன.

இவ்வாறே கொனேறியா Gonorrhoea மற்றும் AIDS இலும் நோய் அறிகுறிகள் தென்படாத நோய்க் காவிகள் காணப்படுவது வழக்கமாகவேயுள்ளது. இவர்கள் AsymP-tomatic Carrier என அழைக்கப்படுவர்.


தற்போது எமது மண்ணில் போரின் பின் விதவைகள் குறிப்பாக இளவயது விதவைகள்,கலாசார சீரழிவுகள்,விவாகரத்துகள், பாலியல் வல்லுறவுகள்,இளவயதுக் கர்ப்பம், இவற்றை விட வேலைவாய்ப்பற்ற நிலையில் இளைஞர்கள் அந்நியச் செலாவணியின் செழுமையுடன் கதியற்றவர்களாகி நகரை வலம் வருதல், இவற்றைவிட அதிகரித்துவிட்ட பாலியல் தொழிற் கிராமங்கள்,இவ்வாறான நிலைகள் யாவும் ஒட்டுமொத்தமாகவே ஒரே திசையில் தான் எமது சமூகத்தின் ஆரோக்கியமான குடித்தொகையை நகர்த்தும் என்றால் மிகையானதல்ல. இவ்வாறான சூழலில் எம் சமூகத்தில் மிகவும் ஆரோக்கியமான குடித்தொகை ஆரோக்கியமற்றதாக நோய்த்தொற்றுக்குள்ளாகும். எதிர்காலம் ஏற்படுவதை மருத்துவத்துறை கண்கொண்டு பார்த்துக் கொண்டிருக்குமா?

இன்னும் சுறுசுறுப்புடன் இயங்க வேண்டிய கட்டப்பாட்டில் மருத்துவத்துறை உள்ளதென்பதே காலத்தின் தேவையாகவேயுள்ளது.

டாக்டர்
வெ.நாகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையுடன் போராடும் வீரபாண்டிய கட்டபொம்மன் வம்சம்



வெப்பத்தில் இருந்து தப்பிக்க ஊட்டிக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் மத்தியில் வித்தியாசமாகத் தெரிந்தது ஒரு முகம். சினிமாவில் வரும் கதாநாயகனை விவரிக்க நினைக்கிறார்களோ என நினைக்க வேண்டாம். சமீபமாகப் பார்த்தபோது காதுகளையும் பாதி முகத்தையும் மறைக்கும் கம்பீர மீசை, சரித்திரத்தை நினைவு கூரச் செய்யும் முண்டாசு.

வீரப்பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதை யூகித்துப் பேசத் தொடங்கும் வேளையில், தொலைக்காட்சியில் எதேச்சையாகப் பார்த்த வானம் பொழிகிறது, பூமி விளைகிறது உனக்கேன் கொடுக்க வேண்டும் கிஸ்தி என்கிற வீர வசனத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். காட்சி முடிந்தவுடன் கண்களில் இருந்து எட்டிப் பார்த்த கண்ணீரைத் துடைத்து பூமியை நனைய விடாமல் தடுத்தார். சற்று நிதானித்த அவரின் முகத்தில் சோகம். இருந்தும் வீரம் குறையவில்லை. அவரிடம் விபரம் கேட்டபோதுதான் தெரிந்தது. வீரபாண்டிய கட்டபொம்மனின் 5 ஆவது தலைமுறை என்று. தனியிடத்தில் அமர்ந்து இவர் குடும்ப வீர வரலாற்றை விபரிக்கத் தொடங்கினார். வீமராசா என்ற ஜெகவீர பாண்டிய சுப்ரமணிய கட்டபொம்ம துரை (70 வயது) என்பது தான் இவரது பெயர். கட்டபொம்மன் என்று உச்சரித்தாலே இவரை மௌனம் தொற்றிக் கொள்கிறது. இயல்பு நிலைக்கு வந்தவர் தற்போதைய நிலையை விபரிக்கத் தொடங்கினார்.



காலம் செல்லச் செல்ல எங்கள் குடும்பம் மிகவும் ஏழ்மையான நிலைக்குத் தள்ளப்பட்டது. எங்களின் சோகம் அறிந்த ஊடக நிறுவனர் ராமசுப்பையர் தனது பத்திரிகையில் செய்தி வெளியிடச் செய்து பண உதவியும் அளித்தது மறக்க முடியாதது. பத்திரிகையில் செய்தி வெளிவந்த பின்தான் எங்களின் கஷ்ட ஜீவனம் பொதுமக்களுக்குத் தெரியத் தொடங்கியது. கடந்த 67 ஆம் ஆண்டு அப்போதைய பொதுப் பணித் துறை அமைச்சர் பதவி வகித்த தற்போதைய முதல்வர் கருணாநிதி, எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு மாதம் 50 ரூபா வழங்கத் தொடங்கினார். 71 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேலும் 5 பேருக்கு உதவித் தொகை கிடைக்கத் தொடங்கியது. 97 ஆம் ஆண்டு எனக்கும் வ.உ.சிதம்பரனார் பேரன், பாரதியார் பேரனுக்கும், தூத்துக்குடியில் நடந்த நிகழ்ச்சியில் மூப்பனார் பேரவை சார்பில் தங்கப் பதக்கம் வழங்கப் பட்டது.

எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என மாநில அரசைத் தொடர்ந்து வலியுறுத்தியதால் பாஞ்சாலங்குறிஞ்சியில் எங்கள் உறவினர்கள் 202 பேருக்கு வீடு, 3 ஏக்கர் நிலம் வழங்கப் பட்டது. விவசாயம் மேற்கொள்ள நிலம் ஏற்றதாக இல்லாததால் பலர் வீடுகளை விற்றுவிட்டனர். எங்களின் வீடும் சிறிது சிறிதாகப் பெயர்ந்து பாழடைந்து வசிக்க முடியாத நிலை ஏற்பட்டது.எங்களின் நிலை அறிந்த பாஞ்சாலங்குறிஞ்சியில் வசித்து யுத்த காலத்தில் மலேசியா சென்ற குடும்பத்தினரில் தற்போது வசிக்கும் பூபதி பிரம்மநாயக்கர் என்பவர் கை கொடுத்து வருகிறார். தமிழக அரசு வழங்கிவரும் ஆயிரம் ரூபாவில் 'தொண்டை'யை நனைத்து வருகிறோம். மகன், மருமகனுக்கும் போதிய வருமானம் இல்லாததால் நடுத்தெருவுக்கு வந்து விடுவோமோ? என்ற அச்சம் ஏற்படுகிறது. சுதந்திர வேட்கைக்கு வித்திட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் குடும்பம் நிர்க்கதியாக விடப்பட்டுள்ளது. மாநில அரசுக்குத்



தெரிந்தும் உதவிகளை அதிகரிக்க முன்வரவில்லை.

ஆண்டுதோறும் நடக்கும் சுதந்திர தின விழாவின் போது சால்வை போர்த்தும் முதல் மரியாதை மட்டுமே எங்களுக்கு கிடைக்கிறது. தியாகிகளுக்குத் தரப்படும் ஓய்வூதியம் போன்று எங்களுக்கும் தர வேண்டும். கட்டபொம்மன் புகழை அறிந்துகொள்ளும் வகையில் சென்னையில் கட்டபொம்மனுக்கு சிலை வைக்க வேண்டும். இவ்வாறு குரல் கம்ம கூறி முடித்தார் வீமராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 200 ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்ட மொழிகள் மீண்டும் உருவாக்கம்

அமெரிக்கத் தீவு ஒன்றில் 200 ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்ட மொழிகளை மீண்டும் உருவாக்குவதில் அந் நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்று ஈடுபட்டுள்ளது.

அமெரிக்காவில், ஐரோப்பியர்கள் குடியேறுவதற்கு முன் சிவப்பிந்தியர்கள் இருந்தனர். அப்போது 300 இற்கும் மேற்பட்ட மொழிகள் அக்கண்டத்தில் பேசப்பட்டன. அவற்றில் இன்றிருப்பவை 175 மட்டுமே, அவையும் காக்கப்படாவிடில் 2050 ஆம் ஆண்டில் 20 மொழிகள் தான் இருக்கும் என்று அமெரிக்காவில் இயங்கிவரும் உள்நாட்டு மொழிகள் கழகம் கவலை தெரிவித்துள்ளது.

நியூயோர்க் அருகிலுள்ள லாங் என்ற தீவில் 200 ஆண்டுகளுக்கு முன் ஷின்னெகொக் மற்றும் அன்கெசவுக் என்ற பழங்குடி மொழிகள் பேசப்பட்டன. இன்று ஷின்னெகொக் மொழியைப் பேசும் பழங்குடிகளாக 1,300 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் சவுதாம்ப்டன் நகரில் இருக்கின்றனர். அன்கெசவுக் மொழி பேசுபவர்களாக 400 பழங்குடியினர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மாஸ்டிக் நகரில் வசிக்கின்றனர்.

இந்நிலையில், அமெரிக்காவின் ஸ்டோனி புருக் பல்கலைக்கழகம் அப்பழங்குடி வம்சத்தைச் சேர்ந்த இருவருடன் இணைந்து மீண்டும் இந்த இரு மொழிகளையும் உருவாக்குவதில் முனைந்துள்ளது.




இதற்காக அவர்கள் கி.பி. 1791 இல் தோமஸ் ஜெபர்சன் உருவாக்கிய பழங்குடியினர் மொழிகளின் சொற்களஞ்சியம் போன்ற பழைய ஆவணங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். சமீப காலமாக அமெரிக்காவில் பழங்குடியின மொழிகளை மீட்டுருவாக்கம் செய்வதில் அந்நாட்டுப் படித்த பழங்குடியினர் ஈடுபட்டு வருகின்றனர். எங்கள் மொழிகள் எங்களின் கலாசாரம் மற்றும் வாழ்க்கையை மீட்டுருவாக்கம் செய்வதில் உதவுகிறது. எங்கள் குழந்தைகள் அவர்களின் சொந்த மொழியில் சொந்த கலாசாரத்தைப் படிக்கும் போது படிப்பில் சிறப்படைகின்றனர் என்கிறார் இப்பணியில் ஈடுபட்டுள்ள அன்கெசவுக் பழங்குடிகளின் தலைவர் ஹரிவலஸ். மனிதப் பண்புகளுக்கான தேசிய அறக்கட்டளையின் தலைவர் புரூஸ் கோல் மொழி என்பது கலாசாரத்தின் டி.என்.ஏ. என்று குறிப்பிடுகிறார்.


ஸ்டோனி புருக் பல்கலை மொழியியல் தலைவர் ரொபர்ட் வி.ஹாபர்மேன், ஷின்னெகொக் மற்றும் அன்கெசவுக் இரு மொழிகளும் ஒத்த தன்மை கொண்டவை. இவை இரண்டும் அல்கான்குயன் மொழிக் குடும்பத்தில் தோன்றியவை என்கிறார். இவற்றை எப்படி மீட்டுருவாக்கம் செய்கின்றனர் என்று அவர் கூறுகையில், முதலில் அந்த மொழிகள் எப்படி இருக்கின்றன என்பதை அவற்றில் புழங்கி வரும் பிரார்த்தனைகள், வாழ்த்துகள், உரையாடல்கள் மற்றும் சொற்பட்டியல்கள் மூலம் கண்டறிவோம். பின் அவற்றில் எந்த சொற்கள் ஒரே வடிவத்திலும் திரிவாகியும் புழங்குகின்றன என்பதைப் பார்ப்போம். பின் படிப்படியாக மீட்டுருவாக்கம் செய்வோம் என்கிறார்.

மேலும் அவர் கூறுகையில், வழக்கிழந்து போன மொழிகளை மீட்டுருவாக்கம் செய்வதில் இன்னொரு சிக்கலும் உள்ளது. அந்த மொழிகளின் அகராதிகள் யாவும் ஆங்கிலத்தில் எழுத்துப் பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. அதிலிருந்து மீட்டுக் கொண்டுவருவது என்பது கடினம் தான் என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியானந்தாவின் 'செக்ஸ்' ஒப்பந்தம்




NON-DISCLOSURE AGREEMENT
*Confidential*

Name: VIDYA VISWANATHAN
Address: 6/678 'USMAS'
OPPOSITE Y.M.C.A, CALICUT, KERALA 673001
Signature: Vidya
Date: SEPTEMBER 3 2005

DHYANAPEETA CHARITABLE TRUST INDIA:
Nithyanandapuri, Kallugopahalli,
Bidadi, Bangalore District
Karnataka, INDIA

செக்ஸ் ஒப்பந்தத்தின் முதல் பக்கம்

**வா**ழ்க்கைக்குத் தேவையான 64 தந்திரங்களில் 6 வகையான தந்திரங்கள் செக்ஸ் தொடர்பானவை என்றும் அதைக் கற்றுத் தரும்போது நிர்வாணமாக இருப்பது உடலுறவு போன்றவற்றில் ஈடுபட வேண்டிவரும் என்றும் இதைப்பற்றி வெளியில் யாரிடமும் சொல்லக் கூடாது என்றும் தனது ஆசிரமத்துக்கு வந்த பெண்களிடம் ஒரு ஒப்பந்தத்தில் நித்தியானந்தா கையெழுத்து வாங்கியுள்ள விபரம் வெளியில் வந்துள்ளது.

சமீபத்தில் கர்நாடக சி.ஐ.டி. பொலிஸார் பெங்களூர் விடுதியில் உள்ள இவரது தியானபீட ஆசிரமத்தில் சோதனை நடத்திய போது இந்த ஆவணங்கள் சிக்கியுள்ளன. மேலும், இந்த சோதனையில் 5 பெண்களுடன் நித்தியானந்தா செக்ஸ் லீலைகளில் ஈடுபட்ட 35 சிடிக்களும் சிக்கியுள்ளன.

இந்தத் தியானபீடத்துக்கு வருவோரிடம் குறிப்பாகப் பெண்களிடம் ஒரு 10 பக்கம் கொண்ட ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கப்படுவதுண்டு. அதில் கடைசிப் பக்கங்களில் செக்ஸ், உடலுறவு தொடர்பான ஷரத்துகளைச் சேர்த்துள்ளனர். இந்த இரு பக்கங்களில் கூறப்பட்டுள்ளதாவது;

வாழ்க்கைக்கு 64 வகையான தந்திரங்கள் தேவை. அதில் 6 வகையான தந்திரங்கள் செக்ஸ் தொடர்பானவை. உணர்ச்சியூட்டும் படங்களைப் பார்ப்பது, காம உணர்வுகளைத் தூண்டும் இசை கேட்பது, நிர்வாணமாக நடமாடுவது ஆத்மாவின் விடுதலைக்கு அவசியம்.

ஆசிரமத்தில் ஆராய்ச்சிக்குத் தேவையான பட்சத்தில் செக்ஸ் வைத்துக்கொள்ளவும் நேரிடும். அதற்கு யாரும் ஆட்சேபம் தெரிவிக்கக்கூடாது. யாரும் யாருடனும் உறவு வைத்துக் கொள்ளலாம்.

இதனால் சிலருக்கு உடல் அளவிலோ, மனதளவிலோ கஷ்டமாக இருந்தால் அதைத் தாங்கிக்கொள்ள வேண்டும். செக்ஸ் உறவில் சம்பந்தப்பட்ட நபர் அதைப்பற்றி வெளியே யாரிடமும் எந்தச் சூழ்நிலையிலும் சொல்லக்கூடாது. மேலும், இந்த ஒப்பந்தம் பற்றியும் வெளியில் சொல்லக்கூடாது. இவ்வாறு அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த 10 பக்க ஆங்கில ஒப்பந்தத்தைப் படித்துப் பார்க்க எல்லாம் நேரமே தராமல் நேரடியாக கையெழுத்து வாங்கியுள்ளனர் இந்த ஆசிரமத்தில் உள்ள நித்தியானந்தாவின் ஆட்கள். ஆசிரமம் தானே கேட்கிறது என்பதால் பெரும்பாலானவர்கள் என்ன எழுதியுள்ளது என்பதைப் படிக்காமலேயே கையெழுத்துப் போட்டுள்ளனர். நீட்டிய பேப்பர்களில் எதுவும் கேட்காமல் கையெழுத்துப் போட்டுத் தந்துள்ளனர். ஆனால், இப்படி ஒப்பந்தம் போட்டு செக்ஸ் வைத்துக்கொள்ளச் சட்டத்தில் இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்பந்தத்தில் நடிகை ரஞ்சிதாவும் கையெழுத்துப் போட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

மேலும், சி.ஐ.டி. பொலிஸார் நடத்திய சோதனையில் நித்தியானந்தாவின் செக்ஸ் லீலைகள் இடம்பெறும் 35 சிடிக்களும் சிக்கியுள்ளன. இந்த சிடிக்களில் நித்தியானந்தா 5 பெண்களுடன் நாள் கணக்கில் செக்ஸ் கும்மாளம் அடிக்கும் காட்சிகள் அடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குற்றங்கள் பெருகும் குடாநாடு

இதுவரை காலமும் குண்டுச் சத்தங்களினாலும் வெடியோசைகளினாலும் குலுங்கிக் கொண்டிருந்த குடாநாடு இன்று கடத்தல், கப்பம் கோரல், கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற குற்றச் செயல்களினால் திணறிக் கொண்டிருக்கின்றது. மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. வீடுகளில் தனியாக இருக்கமுடியாத நிலை, பிள்ளைகள் பாடசாலைக்கு அனுப்ப முடியாத நிலை என அவர்கள் முடங்கிப் போயுள்ளனர்.

குற்றங்கள் மலிந்த பூமியாக இன்று மாறிவிட்ட குடாநாட்டில் நடக்கும் சம்பவங்கள் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துபவையாகவே உள்ளன. ஒரு சில ஆயிரம் ரூபாக்களுக்காகவே கொலை செய்யும் நிலைமை குடாநாட்டில் காணப்படுகின்றது. குற்றவாளிக் கும்பல்கள் வீடுகளை வாடகைக்கு எடுத்து வைத்துக்கொண்டு குற்றச் செயல்களில் ஈடுபடுமளவுக்கு குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை பலவீனப்பட்டு போயுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் குற்றங்கள் நடக்குமிடத்து முறையான தண்டனை கொடுக்கக்கூடிய தலைமைத்துவங்கள் செயற்பட்டு வந்தன. ஆனால் அவ்வாறான தலைமைத்துவம் இன்று குடாநாட்டில் அழிக்கப்பட்ட பின்னர் குற்றச்செயல்கள் தலை விரித்தாடுகின்றன. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டோம். அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என அரசியல்வாதிகள் கூறுகின்ற இவ்வேளையில் இங்கு கடத்தல், கொலை, கப்பம், பாலியல் வல்லுறவு எனக் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன.

வடக்கையும் தெற்கையும் இணைப்பதற்கான சமாதானப் பாதை திறக்கப்பட்ட பின்னர் குடாநாட்டு விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பலரும் தமது உற்பத்திப் பொருட்களை சொந்த இடத்தில் விற்க கஷ்டப்படுகின்ற நிலைமை தோன்றியுள்ளதுடன், தமது பிள்ளைகளையும் இவ்வாறான கும்பல்களிடமிருந்து பாதுகாக்கவும் கஷ்டப்படுகின்றனர்.

இரவு முழுவதும் வெடித்துச் சிதறும் ஷெல் சத்தங்களுக்குள்ளும் காணாமல் போதல், ஆட்கடத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு மத்தியிலும் வாழ்ந்த இம்மக்கள் இன்று தமது ளைகளின் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய கல்வியைத் தேட பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்ப முடியாத அவல நிலை தோன்றியுள்ளது.

குடாநாட்டில் ஓரளவு அமைதி நிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படும் நிலையில் கடந்த மாதம் சாவகச்சேரியைச் சேர்ந்த தி.கபில்நாத் என்ற மாணவன் கடத்தப்பட்டு, மூன்று நாட்களுக்குப் பின் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து உடனடியாகத் தண்டனைகள் வழங்க வேண்டுமென்று சிவில் அமைப்புகள் கோரிக்கை விடுக்கின்ற நிலையில் தொடர்ந்தும் கப்பம் பெறல், கடத்தல், அதனூடான கொலை என்பன அதிகரித்த வண்ணமுள்ளன.



சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த இம்மாணவன் சாதாரண தரப் பரீட்சையை எழுதிய நிலையிலேயே படுகொலை செய்யப்பட்டார். தற்போது வெளிவந்துள்ள க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை முடிவுகள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

வவுனியாவில் மாணவனொருவன் கடத்தப்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ள அதேநேரம், குடாநாட்டில் வெவ்வேறு இடங்களில் மூன்று மாணவர்கள் கடத்தப்பட்டு பின்னர் மீட்கப்பட்டுள்ளனர்.

நடைபெற்ற யுத்தத்திற்குப் பின்னர் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் சொந்த இடங்களுக்குத் திருப்பியனுப்பப்பட்ட நிலையில் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். ஆனாலும் அவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் குறைவைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் தற்போது தனியாகச் சென்று சுதந்திரமாக கல்வியை கற்க முடியாத நிலை தோன்றியுள்ளது. குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமையானது தொடர்பில் பல்வேறு சந்தேகங்களையும் ஊகங்களையும் ஏற்படுத்துகின்றது.

முன்னரை விட தற்போது வடக்கு, கிழக்கு பகுதியில் பெருமளவான பொலிஸ் உட்பட பாதுகாப்புப் படையினர் செயற்படுகின்றனர்.பாதுகாப்பு நடவடிக்கையில் பல்வேறு பட்டவர்களை அரசு உட்படுத்தியுள்ள நிலையில் மாணவர்கள் கடத்தப்படுவது, கொலை செய்யப்படுவது எவ்வாறு நிகழ்கின்றது.

இக்குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பில் உள்ள பொலிஸ், நீதித்துறையினர் சாட்டுப் போக்குகளைக் கூறி தம்மை நியாயப்படுத்த முடியாமல் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்க வேண்டும். இக்குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்ட குழுவினர் இனங்காணப்பட்டு கடும் தண்டனை வழங்கப்படவேண்டும். இவ்வாறு விட்டால் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பாதுகாப்புத்தரப்பினர் ஒருபோதுமே பெறமுடியாது.

**எச்.ஹுஸ்னா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூடுல்ஸ் சாதனை

சீனாவைச் சேர்ந்த 24 வயது சமையல் கலைஞர் வி.தாவோ இவர் வெறும் 1 கிலோ மாவைக்கொண்டு 2 ஆயிரத்து 700 மீற்றர் நீள நூடுல்ஸ் உருவாக்கி உலக சாதனை படைத்தார். அதன் மூலம் நீளமான நூடுல்ஸ் தயாரிப்பதில் தான் ஏற்கனவே புரிந்திருந்த சாதனையை முறியடித்தார் லி.சீனாவின் வடக்கு ஹெபெ மாகாணத்தில் ஹாண்டன் நகரில் உள்ள ஓர் ஹோட்டலில் மொத்தம் 20 இலட்சத்து 97 ஆயிரம் நூடுல்ஸை தாவோ தயாரித்தார். அவற்றில் 18 நூடுல்ஸ் ஊசியின் காதுத் துவாரத்துக்குள் ஒரே நேரத்தில் நுழைத்து விடக் கூடிய அளவு நுண்ணியவை.

2 ஆயிரத்து 700 மீற்றர் அளவுக்கு நூடுல்ஸ் தயாரித்தது லி தாவோவின் மூன்றாவது கின்னஸ் சாதனையாகும். அவரது முந்தைய சாதனை 2000 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்டது. லி.தாவோவின் தந்தை லி சிஹாயும் ஒரு சமையல் கலைஞர். அவர் தனது பணிக்காலத்தில் நீளமான நூடுல்ஸ் தயாரிப்பில் மூன்று கின்னஸ் சாதனைகளைப் படைத்துள்ளார்.






## தெரிந்துகொள்ளுங்கள்!

* நீரில் வாழும் மீன்கள் நீரை பருகுவதில்லை.
* முதலையால் நாக்கை வெளியே நீட்ட முடியாது.
* பன்றியினால் வானத்தை அண்ணார்ந்து பார்க்க முடியாது.
* முயல் தண்ணீரை பருகுவதில்லை.
* முதலைக்கும் திமிங்கலத்திற்கும் நீருக்குள் மீனைப் போல் மூச்சுவிட முடியாது.
* நீந்தத் தெரியாத மிருகம் ஒட்டகம்.
* இந்திய வானொலிக்கு 'ஆகாஷ் வாணி' என்று பெயர் சூட்டியவர் ரவீந்திரநாத் தாகூர்.
* பாரத ரத்னா மற்றும் நோபல் பரிசு இரண்டையும் பெற்றவர்கள் அன்னை தெரேசா, சேர்.சி.வி.ராமன் மற்றும் அமர்த்யா சென் ஆகியோர்.
* டைட்டானிக் கப்பல் தனது ஐந்தாவது பயணத்தில் கடலில் மூழ்கியது. அதில் பயணம் செய்த 2,224 பேரில் 1,513 பேர் உயிரிழந்தனர்.
* அறிஞர் அண்ணாவிற்கு 'தென்னாட்டு பெர்னாட்ஷா' என்ற பட்டத்தை சூட்டியவர் கல்கி.
* தாவரச் செல்லில் இல்லாதது விலங்கு செல்லில் காணப்படுவது சென்ட்ரியோல்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 31

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ❀ | 5 |
| 6 | 7 | ❀ | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | ❀ | 15 |
| 16 | ❀ | 17 | ❀ | 18 | 19 |
| ❀ | 20 | 21 | 22 | 23 | ❀ |
| 24 | 25 | ❀ | ❀ | 26 | 27 |

**இடமிருந்து வலம்**

1. பிறப்பு இருந்தால் இதுவும் இருக்கும்
6. சிலரின் வரலாற்றை இது படிந்த வரலாறு என்றும் கூறுவர் (திரும்பியுள்ளது)
8. ஈடுவைப்பதை இப்படியும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
11. கலர்
18. மீன்பிடிக்கப் பயன்படுவது
20. கொடியேற்ற இது தேவை (குழம்பியுள்ளது)
24. இந்திய கிரிக்கெட் அணிக் கப்டன்
26. ஆற்றுக்கு குறுக்கே கட்டுவது

**மேலிருந்து கீழ்**

1. கடவுள் என்றும் சொல்லலாம்
2. ஆபத்தான ஒரு விளையாட்டு
4. தங்கத்தை இது போடுவார்கள்
5. பாம்பு (குழம்பியுள்ளது)
13. வாசம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
18. கைவிடப்பட்ட பெண் (தலைகீழ்)
20. பழம் என்றும் சொல்லலாம்

### குறுக்கெழுத்துப்போட்டி - 29 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. கல்வி | 1. கலகம் |
| 2. நா | 2. பல் |
| 5. பலம் | 3. விரதம் |
| 8. மதி | 4. நாமம் |
| 11. பாரதம் | 9. பாதி |
| 15. தனம் | 16. வனம் |
| 19. தேநீர் | 20. நீதி |
| 22. பாவம் | 21. போர் |
| 25. போதி | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**அ.தனுராஜ்,**
அரியாலை.

### பாராட்டுப்பெறுவோர்

01. எஸ்.ஜே.கேதீஸ்,
23 டச் வீதி,
சாவகச்சேரி.

02. செ.சசிகாந்,
தரம் 6,
யாழ். வயாவிளான்
மகா மகாவித்தியாலயம்.

03. எஸ்.சுபாஷ்,
நுணாவில் மேற்கு.

04. பி.சர்மிலா,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

05. எம்.சுகன்யா,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் விடைகளை
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

பெயர் : ...............................................................

முகவரி : ...............................................................

...............................................................

## இலக்கிய தகவல்கள்

★ இதுபொது அறிவினை வளர்த்துக் கொள்வதற்கான நேரம். இன்று இலக்கியத் தகவல்கள் சிலவற்றை உங்களுக்காகத் தொகுத்துள்ளோம்.
★ இரவீந்திரநாத் தாகவர் இலக்கியத்திற்கான நோபல் பரிசை 1913 ஆம் ஆண்டு பெற்றார்.
★ திருக்குறள் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட மொழி இலத்தீன்.
★ நோபல் பரிசு அல்பிரெட் நோபல் என்பவரின் நினைவாக 1901 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.
★ இலக்கியத்திற்கான நோபல் பரிசு வென்ற முதல் நபர் சுல்லி புருடோம்மே.
★ பிரபல அமெரிக்க எழுத்தாளரான எர்ன்ஸ்ட் ஹெம்மிங்வே ஆங்கில இலக்கியத்துக்காக 1954 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார்.
★ புனைப்பெயர் சூட்டும் பழக்கம் தோன்றிய முதல் நாடு சீனா.
★ இலக்கியத்திற்கான நோபல் பரிசை பெற்ற முதல் நாடு பிரான்ஸ்.
★ ஞானபீட பரிசு பெற்ற முதல் தமிழ் நாவல் சித்திரப் பாவை.
★ தமிழில் வெளியான முதல் செய்தித்தாள் சுதேசமித்திரன்.
★ முதன்முதலில் அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு கி.பி. 1450.கண்டுபிடித்தவர் ஜான் கூட்டன் பர்க்.
★ முதன் முதலில் இங்கிலாந்தில் வெளியான செய்தித்தாள் கோரண்டோ. ஆண்டு 1621.
★ முதன் முதலில் இந்தியாவில் வெளியான செய்தித்தாள் வங்காள கெஜட். ஆண்டு 1780.
★ தமிழகத்தில் வெளியான முதல் ஆங்கில செய்தித்தாள் மெட்ராஸ் கூரியர். வெளியான ஆண்டு 1785.
★ முதன்முதலில் மும்பையில் வெளியான செய்தித்தாள் பம்பாய் ஹெரால்ட் ஆண்டு கி.பி. 1789.
★ பெரிய புராணத்திற்கு சேக்கிழார் சூட்டிய பெயர் திருத்தொண்டர் புராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககால நாடோடிகள்

சா.இன்குலாப்

இலக்கிய சுவை...

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றுக்கு அடிப்படையாக அமைந்தவை வாய்மொழிப் பாடல்கள். பாணர்கள் வாய்மொழிக் கலையில் சிறந்து விளங்கியுள்ளனர். அப்பாணர் சமூகத்தைச் சேர்ந்தோராக அகவுநர், கோடியர், கண்ணுளர், பொருநர் ஆகியோரைக் குறிப்பிடுவர். அக் கலைஞர்கள் தங்களது தனிப்பட்ட கலை முயற்சியால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்க்கை முறை அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கையாக இருந்துள்ளது. அதை அடிப்படையாகக் கொண்டே பத்துப்பாட்டில் சிறப்புப்பெற்ற ஆற்றுப்படை இலக்கியங்களான பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) முதலியன தோன்றியிருப்பது அறிதற்குரியது. பாணர்கள் ஓரிடத்தில் நிலையாக வாழ்ந்தாரில்லை. தங்கள் குடும்ப வறுமையைப் போக்குவதற்காகவே பல இடங்களுக்குச் சென்று தங்களிடம் உள்ள திறமைகளை வெளிப்படுத்தி அரசர் , வள்ளல் போன்றோரை பாடல்கள் பாடி இன்புறுத்தியுள்ளனர்.

**'வெந்தேறற் கனலியோடு மதிவலந்திரிதரும்**
**தவண்கடல் வரைப்பில் தாங்குநர்ப் பெறாது**
**பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்**
**பழுமரந் தேடும் பறவைப் போலக்**
**கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்**
**புல்லென் யாக்கை புலவாய்ப் பாண' (பா.வரி 17-22)**

என்னும் பெரும்பாணாற்றுப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. பாணர்கள் வாழும் இடங்களில் நிலவிய வறட்சியின் காரணமாக பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகளைப் போல் பல இடங்களுக்குத் திரிந்தலைந்ததையும் தங்கள் கலைத்திறமையை வெளிப்படுத்தவும் பல ஊர்களுக்குச் சென்றுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. பொருள் கொடுத்துக் கலையை விரும்புவோர் குறைவாக இருந்த காரணத்தால் அக் கலைஞர்கள் புரவலர்களை நாடிச் செல்ல வேண்டியிருந்தது. இதை,

**'கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார்? எனச்**
**சுரன்முதல் இருந்த சில்வளை விறலி'**
**(புறநா-103)**

**'கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது**
**சில்செவித்து ஆகிய கேள்வி நொந்து நொந்து**
**ஈங்கு எவன் செய்தியோ பாண'**
**(புறநா-68)**

என்ற பாடல்களால் உணர்த்தப்பட்டுள்ளன.

பாணர்கள் பல ஊர்களுக்குச் சென்றவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் தங்களுக்கென்று ஒரு வசிப்பிடத்தைக் கொண்டிருந்தனர் என்பதை பாண்சேரி (புறம்-348:4), பெரும்பாண் இருக்கை (மதுரைக் காஞ்சி-342) என்னும் பாடல்கள் அடிகள் மூலம் அறியலாம். இதிலிருந்து பாணர்களை 'நாடோடிகள்' என்று அழைப்பது தவறு என்ற கருத்தும் நிலவுகிறது. நாடோடி என்னும் சொல் சமூக செல்வாக்குப் பெறாத சமூகப் பண்பாட்டுப் பொருள் தளத்தில் நிறைந்த கட்டமைப்புடைய சமூக இயக்கத்துக்குள் வராத சுற்றத்தோடு அலைகின்ற எங்கும் வேரூன்றாத மக்களைக் குறிக்கிறது.

இக்கருத்தை, பாணர்களோடு பொருந்திப் பார்க்கையில் ஒத்துப்போவதைக் காணமுடிகிறது.

**'வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகி**
**நெடிய என்னாது சுரம்பல கடந்து**
**வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்**
**பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி**
**ஒம்பாது உண்டு கூம்பாது வீசி**
**வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை'**
**(புறநா-பா.47, அடி-16)**

**'ஆனினம் கலித்த அதர் பல கடந்து**
**மானினம் கலித்த மலையின் ஒழிய**
**மீனினம் கலித்த துறைபல நீந்தி**
**உள்ளிவந்த வள்ளுயிர்ச் சீறியாழ்**
**சிதாஅர் உடுக்கை முதா அரிப்பாண'**
**(புறநா-பா.138, அடி 1-5)**

என்ற பாடல்கள் பாணர்களின் நாடோடி வாழ்க்கையைக் காட்டுகின்றன. பாணர்கள் பல இடங்களுக்கு அலைந்து திரிவோராக இருந்தபோதிலும் இலக்கிய வளர்ச்சிக்கு மூல காரணமாக இருந்துள்ளனர். அவர்களுடைய பாடல்களின் முதுரைகளும் பழமொழிகளும் அருளுரைகளும் அறிவுரைகளும் இலை மறை காய் போல் இடம் பெற்றிருந்தன. அவர்களின் வாழ்க்கை முறை மாறிவரும் சூழலுக்கேற்ப நிலை நிறுத்திக்கொள்ள சமூக மாற்றங்களால் பல்வேறு மாறுதலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. புறநானூறு, ஆற்றுப்படை இலக்கியங்களில் பெருமைப்படுத்தப்பட்ட பாணர்கள், அகப் பாடல்களில் கேலிக்குரியோராகவும் இழிநிலையில் வைத்துப் பார்க்கும் நிலையினராகவும் காணமுடிகிறது. அகப்பாடல்களில் தலைவன் பரத்தையிடம் செல்வதற்குத் துணை புரிவோராகப் பாணர்கள் செயற்பட்டுள்ளனர். பரத்தமை மற்றும் தலைவன் காரணமாக வந்த பாணர்கள் தலைவி , தோழியரின் ஏச்சுகளுக்கு ஆளாகியுள்ளனர் என்பதை குறுந்தொகைப் பாடல் வழி அறியமுடிகிறது.

**'அன்னாய் இவன் ஓர் இளமாணாக்கன்**
**தன்னூர் மன்றத்து என்னன் கொல்லோ**
**இரந்தூண் நிரம்பா மேனியோடு**
**விருந்தின் ஊரும் பெருஞ் செம்மலனே' (பா.33)**

என்ற பாடல் வாயிலாக இளம் மாணவனாகத் திகழும் இவன் ஊர் மன்றத்தில் என்ன செய்வான்? என்றும் 'இரந்தூண் நிரம்பா மேனி' என்றும் கேலி செய்யப்படுவதைக் காண முடிகிறது.

சங்ககாலச் சமூகத்தின் வளர்ச்சி தொடர்ந்து நிலவிய போரின் காரணமாக ஆட்சி அதிகாரங்கள் அடிக்கடி மாறிக்கொண்டிருந்ததன் விளைவாக சமச்சீரற்ற முறையில் இருந்தது. அந்நிலையில், பழைய வாழ்வியல் மரபுகளைச் சுமந்து கொண்டு அலைந்து திரிந்த நாடோடிக் கலைஞர்களின் வாழ்க்கை மிகுந்த நெருக்கடிக்குள்ளானது. பேரரசுகள் நிலைப்படுத்திக்கொள்ள முயன்ற சங்ககாலப் பிற்பகுதியில் கலைஞர்களிடையேயும் நிலையான வாழ்வுக்கான முயற்சிகள் தோன்றின.

திணை மக்களைச் சார்ந்து வாழ்ந்தோர் நாட்டுப் புறக் கலைகளை வளர்த்து வந்தனர். அகவன் மகளிர் , வெறியாடு வேலன் போன்ற சடங்கோடு தொடர்புடைய சிறுதெய்வ வழிபாட்டுக் கலைஞர்களாயினர். பெண் கலைஞர்களில் சிலர் பரத்தையராகவும் ஆயினர். சில கலைஞர்கள் முல்லை, மருதம், நெய்தல் போன்ற திணை நில மக்களின் இல்லற வாழ்க்கைச் சூழலின் வாயில்களாக தூதராக விழாக்காலங்களில் கலை இன்பம் அளிப்பவராக நிலை பெற்றனர். சங்ககாலத்தில் காதல் மற்றும் வீர உணர்வுகளை கலைத்திறமை மூலம் வளர்த்த இப்பாணர்கள் பல்வேறு தளங்களில் இயங்கியுள்ளனர். சங்ககால இறுதியில் பக்தி உணர்வு எழுச்சி பெறத் தொடங்கியபோது அக்கலைஞர்களின் பணி பக்தியாளர்களோடு தொடர்ந்து சென்றுள்ளது என்பதை அறிய முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயகனான 90 கிலோ

தமிழ் சினிமா எத்தனையோ புதுமுகங்களை சந்தித்திருந்தாலும் இப்போது புதிய படமொன்றில் அறிமுகமாகும் நாயகன் ரொம்பவே வித்தியாசமானவர்.சஹானா கிரியேஷன்ஸ் பட நிறுவனம் சார்பில் பி.ராம் தயாரிக்கும் புதிய படம் விநாயகா. தெலுங்கில் வெளியாகி வெற்றிபெற்ற விநாயகடு படத்தின் ரீமேக்கான இப்படத்தை விஜய்யை வைத்து லவ் டுடே, துள்ளித்திரிந்த காலம் உள்ளிட்ட படங்களை இயக்கிய பாலசேகரன் இயக்குகிறார். விநாயகா படத்தில் புதுமுகம் கிருஷ்ணன் கதாநாயகனாக நடிக்கிறார். காதலை மையமாக வைத்து எத்தனையோ திரைப்படங்கள் வெளியாகி இருக்கின்றன. அவற்றில் காதலுக்கு தடையாக பல பிரச்சினைகள் இருந்திருக்கின்றன. விநாயகா படத்தில் இதுவரை எந்தவொரு திரைப் படத்திலும் சொல்லப்படாத ஒரு பிரச்சினை காதலுக்கு தடையாக இருக்கிறது.அது கதாநாயகனின் உருவம்.கோயமுத்தூரில் உள்ள



ஒரு ஐ.ரி கம்பெனியில் சொப்ட்வேர் என்ஜினீயராக இருக்கும் கதாநாயகன் சாட்டிங் செய்யும் போது சென்னையில் உள்ள ஒரு இளம் பெண் அறிமுகமாகிறார். இருவரும் சாட்டிங்கிலேயே நட்பை வளர்த்து ஒருவரையொருவர் பார்க்காமலேயே காதலர்களாகிறார்கள். முகம் தெரியாத தன் காதலியைத் தேடி கோவையில் இருந்து சென்னைக்கு வரும் கதாநாயகனை கண்டதும் அதிர்ச்சியடைகிறார் கதாநாயகி. அதற்கு காரணம் கதாநாயகனின் உருவம். இப்படத்தின் கதைப்படி கதாநாயகன் மற்றவர்களை விட குண்டாக இருக்க வேண்டும் என்பதற்காகவே சுமார் 90 கிலோ எடையுள்ள கிருஷ்ணன் என்பவரை தேடிக் கண்டுபிடித்து இப்படத்தில் கதாநாயகனாக நடிக்க வைத்திருக்கிறார் இயக்குனர் பாலசேகரன்.90 கிலோ இளைஞர் நடிப்பில் ஜெயிக்கிறாரா, இல்லையா? என்பது படம் வெளியானதும் தான் தெரியும்.

## Saturday சினிமா



ஷீலா

## நவம்பரில் எந்திரன் வெளிவருகிறது



நவம்பர் மாதம் எந்திரன் திரைக்கு வருகிறது. சன் பிக்சர்ஸ் தரப்பு இந்த செய்தியை உறுதி செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எந்திரன் படத்தை சன் பிக்சர்ஸ் நேரடியாக தயாரித்து வருகிறது. இதுதவிர சுறா, சிங்கம் போன்ற படங்களின் ஒட்டுமொத்த விநியோக உரிமையை சன் பிக்சர்ஸ் வாங்கியுள்ளது.சூர்யா நடிப்பில் ஹரி இயக்கியிருக்கும் சிங்கம் ஜுன் 5 ஆம் திகதி வெளியாகிறது. ஜூலை 10 ஆம் திகதி ஜெயம் ரவியின் 'தில்லாலங்கடி', ஆகஸ்ட் 15 தனுஷ் நடிப்பில் வெற்றிமாறன் இயக்கியிருக்கும் 'ஆடுகளம்', அக்டோபர் 10 ஆம் திகதி மீண்டுமொரு தனுஷ் படம் 'மாப்பிள்ளை'. இந்தப் படங்களுக்குப் பிறகு நவம்பர் மாதம் 5ஆம் திகதி எந்திரனை திரைக்கு கொண்டுவர சன் பிக்சர்ஸ் முடிவு செய்துள்ளதாம்.இந்த திகதிகளை சன் பிக்சர்ஸ் இறுதி செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரகாஷ்ராஜ் போனி வர்மாவை திருமணம் செய்துகொள்ளப் போகிறாராம்.தமிழில் பிரகாஷ்ராஜ் நடிக்கும் காதலாகி படத்தில் ஒரு பாடலுக்கு போனி வர்மா நடனம் அமைத்துக் கொடுத்திருக்கிறார் என்பது மேலதிக செய்தி.

## 3 இடியட்ஸில் விஜய்?



சுறா ஆடியோ வெளியீட்டு விழாவில் பேசிய கே.எஸ்.ரவிக்குமார், விஜய் அடிதடி படங்களில் மட்டும் நடிக்காமல் தனது பாணியிலிருந்து மாறுபட்டு நடிக்க வேண்டும் என்றார்.மேலும் 3 இடியட்ஸ் ரீமேக்கில் அவர் நடிக்கவிருப்பதாக பத்திரிகையில் படித்தேன்.அது உண்மையா என்பது தெரியாது. ஆனால் நடித்தால் நன்றாக இருக்கும் என தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த விஜய், தனது அடுத்தடுத்தபடங்கள் வித்தியாசமாக இருக்கும் என்றவர்,3 இடியட்ஸில் நடிக்க கேட்டிருப்பதாகவும் இன்னும் நடிப்பது பற்றி முடிவு செய்யவில்லை என்றும் தெரிவித்தார். தற்போது 3 இடியட்ஸ் ரீமேக்கில் நடிக்க விஜய் முன் வந்திருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரம் தெரிவிக்கிறது. இந்தப் படத்துக்காக மென் தாடி வைக்கவும் அவர் முடிவு செய்துள்ளாராம்.3 இடியட்ஸின் தமிழ், தெலுங்கு ரீமேக் உரிமையை ஜெமினி பிலிம் சர்க்யூட் வாங்கியுள்ளது. விஜய் நடிக்க ஒப்புக்கொண்டாலும் யாரை இயக்குனராகப் போடுவது என்ற குழப்பம் நீடிக்கிறது.தரணி,விஷ்ணுவர்தன் கழன்று கொண்ட நிலையில் உன்னைப்போல் ஒருவன் சக்ரியிடம் ஜெமினி ஃபிலிம் சர்க்யூட் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்தும் தமிழில் நடிப்பேன் - ஐஸ்


தமிழில் நிறையப் படங்களில் எதிர்காலத்தில் நடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது என்று கூறியுள்ளார் ஐஸ்வர்யா ராய். உலக அழகிப் பட்டம் வென்ற பின்னர் சினிமாவுக்குள் நுழைந்தார் ஐஸ்வர்யா. தமிழ் மூலமாகத்தான் அவர் நடிகையானார். இருவர் படம்தான் அவரது சினிமா முகவரி. இதையடுத்து ஜீன்ஸ் படத்தில் நடித்து அனைவரையும் கவர்ந்தார். தொடர்ந்து இந்தியில் நுழைந்த அவர் இந்தியில் இன்றளவும் முன்னணியில் இருக்கிறார். இடையில் கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் படத்தில் நடித்தார் ஐஸ்வர்யா. தற்போது மீண்டும் தமிழ் பக்கம் அவரது பார்வை திரும்பியுள்ளது. தற்போது சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் எந்திரன் படத்தில் நடித்துக் கொண்டுள்ள ஐஸ்வர்யா, மணிரத்தினத்தின் இயக்கத்தில் ராவணன் படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த நிலையில் தமிழில் நடிப்பது மிகவும் சௌகரியமாக இருப்பதாகக் கூறியுள்ள ஐஸ்வர்யா எதிர்காலத்தில் நிறையத் தமிழ்ப் படங்களில் நடிக்க ஆர்வமாக இருப்பதாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், தமிழில் நடிப்பது சௌகரியமாக இருக்கிறது. எதிர்காலத்தில் நிறையத் தமிழ்ப்படங்களில் நடிப்பேன் என்று நம்புகிறேன் என்று கூறியுள்ளார்.



கொழுப்பை ஊசி வழியே உறிஞ்சி எடுக்கும் முறையில் தனது எடையை குறைத்த நயன்தாரா, முகத்திலிருந்து மிஸ்ஸான அந்த அழகுச் சதையை மீண்டும் கொண்டுவர தவிக்கிறார்.மட்டனை வெட்டினாலும் வருவேனா என்கிறது சதை.

## தாணுவின் மன்னாதி மன்னன்

தெலுங்கில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்ற மகாதீர தமிழில் மொழிமாற்றம் செய்யப்படுகிறது. தமிழ் மொழிமாற்ற உரிமையை வாங்கியிருப்பவர் தயாரிப்பாளர். தாணு. ராம் தேஜா, காஜல் அகர்வால் நடித்த மகாதீராவுக்கு தாணு தமிழில் வைத்திருக்கும் பெயர் மன்னாதி மன்னன்.சரித்திர காலத்து கதை என்பதால் இந்தப் பெயரை தேர்வு செய்துள்ளார். எம்.ஜி.ஆர்.இதே பெயரில் ஓரு சரித்திரப் படத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ராம் சரண் தேஜா தனது கதாபாத்திரத்துக்கு தமிழிலும் டப்பிங் பேசுகிறார்.தமிழுக்காக சில காட்சிகளை படப்பிடிப்பு செய்து இணைக்கவும் திட்டமிட்டுள்ளனர். குறிப்பாக நகைச்சுவை காட்சி ஒன்றை புதிதாக படத்தில் இணைக்கும் எண்ணம் தாணுவுக்கு இருக்கிறது.



மம்பட்டியான் - பிரசாந்த்

மீன் போன்ற உடல்வாகுடன் இருந்தாலும் அசைவத்திலிருந்து முழு சைவத்திற்கு மாறி விட்டார் ஸ்ரேயா, எல்லாம் ஜக்கி ஆசிரமத்திற்கு போய் வந்ததிலிருந்து தான். உயிர்கள் பாவம் அதை உண்பது அதைவிடப் பாவம் என்கிறார் ஸ்ரே.

## தமிழ் பேசும் ஜக்கிசான்



ஜாக்கிசான் படங்களைப் பார்த்து நரம்பெல்லாம் முறுக்கேறி திரியும் இளசுகளுக்கு அவரை சென்னைக்கே வரவழைத்து சிலிர்ப்பூட்டினார் ஒஸ்கர் ரவிச்சந்திரன். ஜாக்கியை வைத்து அவர் படமெடுக்கப் போகிறார் என்ற பேச்சு காட்டு தீ போல பரவி வரும் வேளையில் இந்த முரட்டு வீரனை தமிழ் பேசவைத்து வெளி வருகிறது ஒரு (தமிழ்) படம். அதுதான் தி கராத்தே கிட்! பிரபல ஹொலிவுட் நாயகன் வில் ஸ்மித் தனது மகன் ஜேடனை நடிக்க வைத்து தயாரிக்கும் படம் இது. முக்கிய வேடத்தில் ஜேடன் நடிக்க அவருக்கு சப்போர்ட் பண்ணுகிற வேடத்தில் ஜாக்கிசான் நடிக்கிறார். தன் தாயுடன் சீனாவுக்கு இடம் பெயரும் ஒரு சிறுவன் போன புது இடத்தில் அவனது வகுப்பு மாணவர்களால் கொடுமைப்படுத்தப்படுகிறான். மிகவும் பலவீனமான இவன் அவர்களின் கொடுமையை ஒரு மாணவியின் முன் அனுபவிக்கிறான். இதனால் அவனுக்குள் வலிஒரு புறமும் அவமானம் மறுபுறமும் தாக்குகிறது. அந்த நேரத்தில் தான் அவனது குங்ஃப்பூ மாஸ்டருக்கு எல்லா உண்மைகளும் தெரிகிறது. போராடி ஜெயிப்பது எப்படி என்பதை கற்றுக்கொடுக்கிறார். சிறுவன் தன்னை துன்பப்படுத்தியவர்களை அடித்து பின்னி எடுப்பதுதான் இந்த தி கராத்தே கிட். அந்த குங்ஃப்பூ மாஸ்டர்தான் ஜாக்கிசான் என்பது உங்களுக்கு சொல்லியா தெரிய வேண்டும்.

முன்னணி சேனல் ஒன்று சுழி படத்தை வாங்குவதாகக் கூறி கடைசி நேரத்தில் மறுத்துவிட்டதாம். இதை நம்பி விளம்பர விஷயத்தில் மெத்தனம் காட்டி வந்த தயாரிப்பு தரப்பு இப்போது சுறுசுறுப்பாகியிருக்கிறது. எல்லாம் சரியாக நடந்திருந்தால் பெரிய வரவேற்பு இருந்திருக்குமே என்று கவலைப்படுகிறாராம் அந்த மினி இயக்குனர்.

மீன், நண்டு, இறால் என்று வெளுத்துக்கட்டும் த்ரிஷா அப்படியும் ஒரே எடையுடன் இருப்பது பிற நடிகைகளை ஏங்க வைத்திருக்கிறது. ருசிக்காக சாப்பிட்டாலும், ட்[illegible] மில்லில் கலோரியை குறைத்துவிடுகிறது இந்த ஜி[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# லலித்மோடி

உலகளவில் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு அடுத்தபடியாக அதிகளவான ரசிகர்கள் உள்ள விளையாட்டாக கிரிக்கெட் உள்ளது.

இக்கிரிக்கெட் விளையாட்டானது ஆரம்பத்தில் டெஸ்ட் போட்டியாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 50 ஓவர் கொண்ட ஒருநாள் போட்டியாகவும் சர்வதேச அளவில் நடத்தப்படுகிறது.

இந்நிலையில் கிரிக்கெட்டின் மற்றொரு புதிய பரிணாமமாக *'T20'* எனக் கூறப்படும் ருவென்ரி ருவென்ரி தொடர் உலகளவில் பிரசித்தம் பெற்றுவருகின்றது.

*'T20'* வரிசையில் இந்தியாவில் நடத்தப்படும் இந்தியன் பிரீமியர் லிக் சுற்றுப் போட்டியைத் தொடர்ந்து *T20* மிகவும் பிரபலமானது.

இந்தியன் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டி ஆரம்பிக்கப்படுவதற்கு முக்கிய [illegible]ணமாக இருந்தவர்களில் லலித்மோ[illegible] ஒருவர்.

[illegible]னால், தற்பொழுது நடைபெற்று முடிந்துள்ள மூன்றாவது இந்தியன் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டிகளைத் தொடர்ந்து லலித்மோடி ஊழல், மோசடி குற்றச்சாட்டில் தலைமைப் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இந்திய தலைநகர் புதுடில்லியில் மார்வாடி குடும்பம் ஒன்றில் 1963 நவம்பர் 29இல் பிறந்த லலித் குமார் மோடி, நைனிடால் செண்ட் ஜோசப் கல்லூரியில் கல்வி பயின்று அமெரிக்காவின் ட்யூக் பல்கலைக்கழகத்தில் 1986இல் விளம்பரத்துறையில் பட்டம் பெற்றார்.

பின்னர் பல்வேறு பதவிநிலைகளை வகித்த லலித்மோடி இந்தியன் பிரீமியர் லீக்கின் தலைவராகவும் அதற்கு முன்னர் இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகளில் ஒருவராகவும் இருந்து இந்திய கிரிக்கெட் வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றியுள்ளார்.

இந்திய தொழிலதிபர்களில் முக்கியமானவர்களில் ஒருவராகத் திகழும் லலித் மோடி, 2005 ஆம் ஆண்டு முதல் இந்திய கிரிக்கெட் சபை துணைத் தலைவராகவும் பஞ்சாப் கிரிக்கெட் கழக துணைத் தலைவராகவும் இருந்து வருகின்றார்.

அத்துடன் மோடி என்ரர் பிறைசஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராகவும் கோட் பிரேபிலிப்ஸ்-இந்திய நிறுவனத்தின் செயல் நிர்வாக இயக்குனராகவும் இருந்து வருகின்றார்.

இந்திய கிரிக்கெட் சபையை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்சென்று பெருவெற்றி கண்டமைக்காக 2008 ஆம் ஆண்டில் 'த பிஸினஸ் ஸ்டாண்டர்ட்' எனும் விருது மோடிக்கு வழங்கப்பட்டது.

இதேவேளை சர்வதேச வர்த்தக இதழான பிஸினஸ் ருடேயில் 2008இல் வெளியான விளையாட்டு உலகில் உலகளாவிய அளவில் மிகவும் சக்திவாய்ந்த நபர்கள் பட்டியலில் மோடி 19 ஆவது இடத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் இந்தியாவில் மிகவும் புதுமை பயக்கும் வர்த்தகத் தலைவர் என்ற விருதையும் மோடி பெற்றிருந்தார்.

மினால் என்பவரைத் திருமணம் செய்த மோடிக்கு ருசிர், அலியா மற்றும் கரிமா என்று மூன்று பிள்ளைகள் உள்ளனர்.


மோடியின் மனைவி மோடியின் தாயாரது நண்பியாகும். அத்துடன் மோடியை விட 9 வயது மூத்தவரும் ஆவார்.

தற்பொழுது மிகவும் பிரபலமடைந்துள்ள இந்தியன் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டிகளை திறம்பட நடாத்துவதாக மோடிக்கு பாராட்டுக்கள் குவிந்தவண்ணம் இருந்தன.

இந்நிலையில் தற்பொழுது நடைபெற்று முடிந்த மூன்றாவது இந்தியன் பிரீமியர் லீக் இறுதிக்கட்டத்தை தொடர்ந்து ஊழல், மோசடி உள்ளிட்ட 22 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் மோடி தற்போது ஐ.பி.எல். தலைமைப் பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழன் நான் ஈரவிழியுடன்...

இறுதி நோக்கம்
இரட்டை வயிறு நிரப்புதல்தான்
இருந்தாலும்
இறந்த ஈசலுக்கு
இறுதிச் சடங்கனைத்தும்
நடத்துகின்றன எறும்புகள்
பாடை சுமத்தல் தொட்டு
அணிவகுப்பு மரியாதை வரை

சுறுசுறுப்பாய் செய்யும்
எலும்புகளை எண்ணுகையில்
என் எண்ணமும்
எறும்பாய் ஊர்ந்து
இறக்கை இழந்த
ஈசல்போல
விழுந்தது வன்னி மண்ணில்...
அங்கு

அடக்கம் செய்யாது
அழுகிய நிலையில்
பிணங்கள் பல...
சில பற்றைகளுக்குள்
இன்னும் சில அங்குமிங்குமாக...
ஈசலிலும் இழிந்தவனா
ஈழத்தமிழன்...?

**சு.றாயுமன், குடத்தனை.**

## மீண்டும் ஜனிப்பேன்

கோடி மின்மினிகளை
பிடித்து ஒன்று சேர்த்து
சூரியனாக்கியுள்ளேன்
ஒரு சமுதாய விடிவிற்காய்...!

ஒரேயொரு நீர்த்துளியை எடுத்து
சமுத்திரமாக்கியுள்ளேன்
சாக்கடையாக்கி
விடாதீர்கள்...!

ஒரு ரோஜாச் செடியை நாட்டி
நந்தவனமாக்கியுள்ளேன்
சுடுகாடாய்...
ஆக்கிவிடாதீர்கள்...!

கோடானு கோடி
கொடுமைகளை எடுத்து
சலவை செய்து
தூய்மையான சிலுவை...
செய்துள்ளேன்...!
எந்த அவசரத்திலும்
ஆண்களை அடித்து விடாதீர்கள்...

இந்த விட்டிலின் சிறகுகள்
சூரிய வெளிச்சத்தையே...
எரிக்கவல்லன
தீபங்களைக் காட்டி
பயப்படுத்தாதீர்கள்...!

என் சிறகுகளை
சாய்த்து விட்டாலும்
அதில் இருந்தே...
ஜனிப்பேன்...மீண்டும்!

**செ.மோகன்ராஜ்,**
**நெடுந்தீவு-12.**

## கனவில் நினைவு

'பட்டப்படிப்புக்' கனவை
எட்டிப்பிடிக்க நான்
திட்டம் போட்டபோது...
நீ...அன்று
வெட்டும் விழி கொண்டு
மோதி என்
இதயத்தில் நுழைந்ததனால்...!
தட்டுத்தடுமாறி நினைவை
காதல் கனவுலகில்
மேயவிட்டேன்...
பட்டுப்படாரென உன்மனம்
என்னை வெறுத்ததனால்...
திக்குத் திசையறியா
ஒற்றை மான் ஆனேன்...
முட்டிமோதி என்னுடன்
போட்டி போட்ட பையன்
பட்டப்படிப்பினில்...!
உனை நினைத்து
பாட்டு எழுதி நான்
பைத்தியம் ஆகினேன்
இவ்விடத்தில்...?

**த.தாஸ், காரைநகர்.**




## மூப்பு

காலமெல்லாம் கடமை செய்து
களைப்படைந்த கைகள்
கால வீதி நடந்து களைத்துவிட்ட
கால்கள்
வாலிபத்தின் நிழல் மறைந்து
வளைந்து விட்ட மேனி
வந்துவிட்டதிப்போ வயது சென்று
மூப்பு

கை கால்கள் நடுங்கிக்
கண்ணொளியும் மங்கி
காதுமந்தமாகிக் கதை புலம்பலாகி
இருமல்,தும்மல், களைப்பு
இளைப்புச் சொந்தமாகி
இடுகாட்டை நோக்கிவரும் பாதை
மூப்பு

பாழடைந்த கோட்டையிது
பழுதடைந்த சிற்பம்
பல வயது கடந்து பழுத்துவிட்ட
ஓலை
வாலிபத்தின் மீது காலம் செய்த
கோலம்
வந்துடலம் பற்றி வந்ததிந்த மூப்பு

காளை நிலை மாறிக் கனிந்த
பழமாகி
மாலைப் பொழுதாகி மங்கல்
நிலவாகி
நாலு பேர்கள் சுமந்து நடுக்காட்டில்
எரிக்க
காலம் செய்த கூத்து கனிந்து
வந்தது மூப்பு

அன்று புது மொட்டு இன்றுலர்ந்த
மாலை
அன்று மலர்த் தோட்டம் இன்று
வற்றல் பாலை
சென்று போன மிடுக்கு வந்ததிந்த
தளர்வு
இன்று வந்து மூப்பு நின்றுவிடும்
மூச்சு

இளமைநிலை மாறி
இழிந்துவிட்ட மேனி
இடையில் அது
கவடிக் களித்தவைகள் கோடி
வழமை நிலைமாறி வயது
கிழமாகி
வாழ்க்கையது ஓடிச் சேருமிடம்
மூப்பு

**கந்த பேரின்பம், 'தீவான்'**

## புதிய உதயம் உருவாக...

ஓ...இளமையே
உன் வருகைக்காய்
புதிய வரலாறு
தன் பக்கங்களைத் திறந்து
காத்துக் கொண்டிருக்கிறது
வரலாறு வசைய
உன் (இள)மையை
சாதனைப் பேனாவில் ஊற்று
ஊதாரித்தனமாய்
உதாசினம் செய்யாதே
ஊற்றுக்களை
உண்மையொன்றை
உணர்ந்து
உருவாகுங்கள்

புதிய உதயம் உருவாக-அது
அ(ம)ம்மிகளில்
குழவிகள்
உறுண்டபோது
உருவான சம்பல்கள்தான்
நாம்...
ஏன் தெரியுமா?
சமூகத்திற்குச் சுவைகொடுக்க

**அ.அல்வின்,**
**பொற்பதி, குடத்தனை.**

## கூண்டுக்கிளி

ஆண்டவனின் அருட்படைப்பில்
அழகான பூந்தோட்டம்
பூக்களோடு பூக்களாய் நானும்
மொட்டாக இருந்த வரை -என்
சுட்டிக்குக் குறைவில்லை
பருவமடைந்த போது
செவ்விதழ் மெல்ல விரித்தேன்
என்ன அநியாயம்!
வீசியது புயல்காற்று
இரும்புப் பூட்டுகளும்
கம்பிக் கதவுகளும் இல்லாத
விசித்திரச் சிறைக்கூண்டு
வாடிய இதழ்களுடன்
வானத்தைப் பார்த்தேன்
உல்லாசமாய்ப் பறந்தது
உயரத்தில் பச்சைக்கிளி
இணைந்தே ஒலித்தது-என்
இதயத்தின் கனவுவலி
ஆண்டவரே...
அடுத்து ஓர் பிறப்பிருந்தால் -நான்
பச்சைக்கிளி ஆக வேண்டும்-அப்போதும்
என்னை அடைத்து வைத்துத்தான்
அழகு பார்ப்பதாயின்
பிறப்பே இல்லாத இறப்பு வேண்டும்.

**த.நாரணி, இணுவில்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்குமிடமின்றி தவிக்கும் சீனர்கள்


கொழும்பு போன்ற நகரங்களில் வீட்டு வாடகை கொடுக்கவே நாம் திணறிக் கொண்டிருக்கிறோம். சீனாவில் அதே காரணத்தால் இப்போது 'கேப்சூல் அபார்ட்மென்ட்'கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில் சீன இளம் பெண் ஒருவர் முதன் முதலாக 2 ச.மீ.பரப்பளவே உள்ள ஒரு மிகச் சிறிய அறையில் தன் வாழ்க்கையைத் தொடங்கியுள்ளார்.

சீனாவின் பல்வேறு கிராமங்களிலிருந்து வேலை வாய்ப்புக்காக பீஜிங் உள்ளிட்ட பெருநகரங்களுக்கு இலட்சக்கணக்கான இளையோர் படையெடுக்கின்றனர்.

இப்படி வரும் இளையோரை 'ஆன்ட் டிரைப்' [எறும்புக் குழு] என்கிறார் பேகிங் பல்கலைப் பேராசிரியர் லியன் சின். பீஜிங்கில் மட்டும் இப்படி ஒரு இலட்சம் பேர் எறும்புக் குழுவினர் இருக்கின்றனர். பிற நகரங்களில் 10 இலட்சம் பேர் வரை இருக்கின்றனர். இவர்களால் பெருநகரங்களில் வீட்டு வாடகை கன்னாபின்னாவென்று ஏறிவிட்டது. வேலைக்கு வந்த இளைஞர்கள் கிடைத்த வேலையைச் செய்து குறைந்த சம்பளம் தான் வாங்க வேண்டிய நிலை நிலவுகிறது. அந்தச் சம்பளத்தில் வாடகையும் கொடுத்து குடும்பத்தையும் கவனித்துக் கொள்வது பெரும் சுமைதான். அதனால் சில நகரங்களில் சேரிப் பகுதிகளில் இவர்கள் குடியிருக்கின்றனர்.

இப்போது அங்கும் வாடகை அதிகரித்து விட்டதால் வேறு சில நகரங்களில் நகருக்கு வெளியே வீதியோரமாக வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் உபயோகமற்ற கொள்கலன்களில் குடும்பத்துடன் குடியேறுகின்றனர். இந்தக் கொள்கலன்களுக்கு ஒரு நாள் வாடகை 120 ரூபா முற்பணம் 175 ஆயிரம் ரூபா. இந்தக் கொள்கலனும் கிடைக்காதவர்கள் பொதுக் கழிவறைகளின் படுக்கை, சமையல் சாமான்களோடு குடியேறி விடுகின்றனர். ஊடகங்கள் இது குறித்துப் பரபரப்பாகப் படமெடுத்துப் போட்டும் இப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. சீன அரசு 84 ஆயிரம் கோடி ரூபா செலவழித்து 'நலக்குடியிருப்புகள் தொகுப்பு' கட்டிக் கொடுத்து குறைந்த வாடகைக்கு விடுவது குறித்துத் திட்டமிட்டது. ஆனால், ரியல் எஸ்டேட் தொழில் முதலைகள் தங்கள் வரும்படியில் மண்விழுந்து விடுமோ என்று பதறிப்போய் அந்தத் திட்டத்தையே கைவிடச் செய்தனர்.

இதற்கிடையில் சமீபத்தில் ஜங் கீ [25 வயது] என்ற இளம் பெண் 2 சதுர மீற்றர் பரப்பளவே உள்ள ஒரு மிகச் சிறிய அறையில் குடியேறியிருக்கிறார். சீனாவிலேயே இவ்வளவு குறைந்த பரப்பளவில் குடியேறிய முதல் சீனக் குடிமகள் ஜங் தான். இதுபோல பல அறைகள் உள்ள அபார்ட்மென்டுக்குத்தான் 'கேப்சூல் அபார்ட்மென்ட்' என்று பெயர் அந்தப் பரப்பளவில் ஒரேயொரு படுக்கையை மட்டும்தான் போட முடியும். இதற்கு முன்பு இவர் தன் தோழிகளோடு ஒரு அபார்ட்மென்டில் இருந்தபோது இவரது பங்கு வாடகை மட்டுமே 15 ஆயிரம் ரூபா வந்தது. அதையும் கொடுத்து குடும்பத்தையும் கவனிக்க முடியாததால் இப்போது 'கேப்சூல்'க்கு வந்துவிட்டார். இங்கு வாடகை 4,800 ரூபா மட்டும்தான். இதில் தனிக் கழிவறை கிடையாது. பொதுக் கழிவறையைத்தான் பயன்படுத்த வேண்டும்.



இந்தக் 'கேப்சூல் அபார்ட்மென்ட்'டைக் கட்டி வாடகைக்கு விட்டுள்ள ஹூவொங்ரிக் சின் கூறுகையில்;

'அதிக வாடகை கொடுக்க இயலாத சீன கிராமத்துக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வேலை பார்க்கும் இளையோருக்காகத்தான் இதைக் கட்டியுள்ளேன்' என்கிறார். இது குறித்து இணையத்தளங்களில் சீன மக்கள் 'இதைவிட குவான்டனமோ சிறையே மேல்; 96 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவு கொண்ட சீனாவில் அந்நாட்டுக் குடிமகனுக்கு 2 ச.மீ.இடம்தான் இருக்கிறதா? மக்கள் பிரச்சினைகள் அரசிடம் முறையாக எடுத்துச் சொல்லாத அதிகாரிகளைத்தான் இதுபோன்ற 'கேப்சூல்' களுக்குள் போட வேண்டும்' எனக் கொந்தளித்து எழுதித் தள்ளுகின்றனர். ஆனால்,ஜங்கோ 'இந்தக் கேப்சூலில் பல அசௌகரியங்கள் இருந்தாலும் இதில் மிச்சம் பிடிக்கும் பணம் குடும்பத்துக்கு உதவுகிறது' என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலநடுக்க ஆபத்தில் காப்பாற்றும் நாய்

உங்கள் வீட்டில் நாய் வளர்க்கிறீர்களா? நிலநடுக்கம் போன்ற பேராபத்து காலத்தில் அது உங்கள் உயிரைக் காப்பாற்றும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஜப்பான், இந்தோனேசியா போன்ற நாடுகளில் நிலநடுக்கம், சுனாமி போன்ற பேராபத்துகள் அடிக்கடி நிகழ்வதுண்டு. கால மாற்றத்தால் எல்லா நாடுகளின் பெருநகரங்களிலும் திடீர் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

இந்த ஆபத்தில் இருந்து தப்பிக்க உடைபோல் அணிந்து கொள்ளும் எச்சரிக்கை கருவி தயாரிக்கப்பட்டுள்ளது. இரு பிரிவாக இருக்கும் இந்தக் கருவியில் ஒன்றை உங்கள் வீட்டு நாயின் உடலில் பொருத்திவிட வேண்டும். மற்றொன்றை உங்கள்




சட்டையில் பொருத்திக் கொள்ளலாம்.

நிலநடுக்கத்தில் சிக்கிக் கொண்டால் நீங்கள் இருக்கும் இடத்தை நாயின் உடலில் பொருத்தி இருக்கும் கருவி மூலம் கண்டுபிடிக்கலாம். இந்தக் கருவியில் இருந்து உங்களுக்கு நெருக்கமான ஒருவருக்கு தகவல் செல்லும்படி ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

அத்துடன், நீங்கள் இருக்கும் இடத்திற்கு முன்பாக நாய் வந்து நின்றுவிடுவதால் உங்களைக் கண்டுபிடித்து மீட்பது சுலபம். நிலநடுக்கப் பகுதியில் சோதித்துப் பார்த்து இந்தக் கருவி வெற்றி பெற்றுள்ளது.

டென்மார்க் நாட்டின் கோபன்ஹெகன் இன்ஸ்டிடியூட் மாணவர் லூராபோபி மற்றும் குழுவினர் இந்தக் கருவியை உருவாக்கி உள்ளனர்.

# விவசாயிகளுக்கு ரோபோ



விவசாயப் பணிகளிலும் எந்திரமயம் பெருகிவிட்டது. விதைத்தல், நாற்று நடுதல், களையெடுத்தல், நெல் அறுவடை என பல பணிகள் எந்திரங்களால் செய்யப்படுகிறது.

காய்கறி, பூப் பறித்தல் மற்றும் கிழங்கு சேகரித்தல் போன்ற பணிகள் சற்று சிரமமானது. தற்காலத்தில் கூலியாட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. பணியாளர்களின் சிரமத்தை குறைத்து பணியின் வேகத்தைக் கூட்ட ஒரு ரோபோ வந்துள்ளது.

இந்த ரோபோவை உடலில் பொருத்திக் கொள்ளலாம். இது கிழங்கு சேகரித்தல், காய்கறி பறித்தல் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் மூட்டுவலியைப் பெருமளவு குறைக்கும். விவசாயப் பணிகள் தவிர்ந்த நேரங்களிலும் (60 வயதுக்கு மேற்பட்டவர்கள்) சுறுசுறுப்பாக இயங்க இந்த ரோபோ துணைபுரியும். ரோபோ அவர்களுக்கு 62 சதவீத அளவு தெம்பு அளிக்கிறது.


ஜப்பானைச் சேர்ந்த வேளா தொழில்நுட்ப பல்கலைக்கழக மாணவர் டோயாமா இந்த ரோபோவைத் தயாரித்துள்ளார். 20 கிலோ, 30 கிலோ என இரு வகை எடையுடன் ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இறுதி முதல் இது விற்பனைக்கு வர உள்ளது.

# மனிதர் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிய கம்பியூட்டர் கண்டுபிடிப்பு

பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள், மனிதர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைக் கண்டுபிடிக்கும் வகையிலான கம்யூட்டரை வடிவமைத்துள்ளனர். இதுகுறித்து லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மற்றும் அவரது சகாக்கள் கூறியதாவது;

கம்பியூட்டரால் மனிதர்களின் மூளையை ஸ்கேன் செய்வதன் மூலம் அவர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைப் புரிந்து கொண்டு அவற்றை அப்படியே வெளிப்படுத்த முடியும். இதற்காக பத்து தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இவர்களுக்கு சில பெண்கள் கடிதங்களை தபால் பெட்டியில் போடுவது, பேப்பர் கப்பில் கோப்பி அருந்துவது போன்ற காட்சிகள் அடங்கிய சில விநாடிகள் மட்டுமே ஒளிபரப்பாகக் கூடிய படம் காண்பிக்கப்பட்டது. அதன்பின் அவர்கள் என்ன பார்த்தனர் என்பதைத் திரும்ப நினைவுபடுத்திப் பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அப்போது ஸ்கேனர் கருவி மூலம் மூளையில் ஏற்படும் ரத்த ஓட்ட மாறுதல்களை வைத்து அதன் செயற்பாடு பதிவு செய்யப்பட்டது. பின்னர் அந்த எலக்ட்ரிக்கல் தகவல்களை அதற்கென உருவாக்கப்பட்ட கம்யூட்டர் புரோகிராம் மூலம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் நினைவு கூர்ந்ததை 50 சதவீதம் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# சூரியனில் நடக்கும் மாற்றங்கள் படம்பிடித்து வெளியிட்டுள்ள நாசா

சூரியனில் நடக்கும் மாற்றங்களை இதுவரை அறியாத புதிய கோணத்தில் படம் பிடித்து வெளியிட்டுள்ளது அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம். பார்க்கவே படு பிரமிப்பாக இருக்கும் இந்தப் படங்களை நாசாவின் சூரிய இயக்க கண்காணிப்பு செயற்கைக் கோள் எடுத்து அனுப்பியுள்ளது. சூரியனில் ஏற்படும் மின் காந்தப் புயல்கள், பீறிடும் பிளாஸ்மா ஆகியவற்றை நெருக்கமாகப் படம் பிடிக்க இந்தப் பிரத்தியேக செயற்கைக் கோளை ஏவியது நாசா.


இந்தச் செயற்கைக் கோள் எடுத்து அனுப்பியுள்ள அட்டகாசமான படங்களை விளக்கங்களுடன் வெளியிட்டுள்ளது நாசா. கடந்த பெப்ரவரி 11 ஆம் திகதி இந்த செயற்கைக் கோளை



நாசா அனுப்பியது. இதுகுறித்து திட்டத் தலைமை விஞ்ஞானி டீன் பெஸ்னல் கூறுகையில், சூரியன் குறித்த பல கருத்துகளை இந்தப் புதிய படங்கள் பொய்யாக்கியுள்ளது என்றார்.

நாசா ஹீலியோபிசிக்ஸ் பிரிவு இயக்குநர் ரிச்சர்ட் பிஷர் கூறுகையில், செயற்கைக் கோள் எந்தவிதக் கோளாறும் இல்லாமல் செயற்பட்டு வருகிறது. கொலராடோ ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட சாதனம் உள்ளிட்ட பல முக்கிய கருவிகள் இந்த செயற்கைக் கோளில் பொருத்தப்பட்டுள்ளது. மொத்தம் அதில் மூன்று கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன என்றார்.

# சகாராவில் சூரிய சக்தியால் உலகமே ஒளிரும்



ஜெர்மனியைச் சேர்ந்த இன்ஜினியர்கள், சகாரா பாலைவனத்தில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் சாதனங்களை நிறுவ திட்டமிட்டுள்ளனர். இந்த சூரிய சக்தித் திட்டம் மூலம் உலகத்திற்கே மின்சாரம் விநியோகம் செய்ய முடியும் என தொழில்நுட்ப வல்லுனர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சகாரா பாலைவனத்தில் 35 இலட்சம் சதுர மைல் பரப்பளவை இந்தத் திட்டத்திற்காக பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் பயன்படுத்தவுள்ளனர். இது சகாரா பாலைவனத்தின் மொத்த பரப்பளவில் 1 சதவீதம். இது குறித்து டிஸ்கவரி நியூஸ் வெளியிட்டுள்ள செய்தி;

இந்தத் திட்டத்திற்காக தொட்டி போன்ற அமைப்புடைய பாரபோலிக் ட்ரப்ஸ் சாதனத்தைப் பயன்படுத்தி சூரிய வெப்பத்தை சேகரித்து அதற்கென இருக்கும் பிரத்தியேக தொழில்நுட்பத்தின் மூலம் மின்சாரம் தயாரிக்க வல்லுனர்கள் திட்டமிட்டுள்ளனர்.

வரும் 2050 ஆம் ஆண்டு ஐரோப்பாவின் மின்சாரத் தேவையில் 15 சதவீதத்தை பூர்த்தி செய்வதே இந்தத் திட்டத்தின் முதல் நோக்கம். சகாரா பாலைவனத்தில் இருந்து ஐரோப்பாவிற்கு மின்சாரத்தைக் கொண்டு செல்வது தான் பிரச்சினையாக கருதப்படுகிறது. இதற்கும் தீர்வு காணுவோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர் இவ்வாறு அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# தூங்காத இராத்திரிகள்

மகாலஷ்மி ஜெகதீஸ்வரன், மூளாய்.

'தங்கம் உதில நெருப்பெட்டி இருக்கு எடுத்து தாவன்' என்று மனோகர் தனது தங்கையைக் கேட்டான். சும்மா போ உனக்கு நான் என்ன வேலைக்காரியோ? தங்கையின் பதில் சட்டென காதைத் துளைத்தது. மனோகரின் கைவிளக்கு எண்ணெய் இல்லாமல் தவித்து கொஞ்ச நேரத்துக்கு முதல் தான் எண்ணெய் விட்டான். மறுபடியும் வாடைக்காற்றின் வரவால் ஒரு கணம் 'பொக்' என்றது.

இரு கரங்கள் அந்தக் கும்மிருட்டிலே விளக்கை ஏற்றின. அதுதான் மனோகரின் தாய் செல்லம்மா. சுனாமி அரக்கனின் கோரப்பிடியில் தனது கணவனை இழந்த செல்லம்மா தனது இரு பிள்ளைகளின் வாழ்வுக்காகக் கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றினாள்.மனோகர் உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்கிறான். தங்கம் என்று செல்லமாக அழைக்கப்படும் அவன் தங்கை தர்ஷிகா பத்தாம் தரத்தில் கற்கிறாள். தனது பிள்ளைகள் படிப்பில் கெட்டிக்காரர்கள் என்று செல்லம்மாவுக்கு மனதில் ஓர் நிம்மதி.அதனால் தனது பிள்ளைகளை முடிந்தளவு கஷ்டப்பட்டு படிப்பித்தாள்.

மின்சார ஒளி இல்லாத சிறு குடிசையிலேயே மனோகரும் தங்கமும் தங்கள் கல்வியைக் கற்கவேண்டிய சூழ்நிலை.வீட்டின் வறுமையே இவர்களின் கனவுக்கும் கற்பனைக்கும் வித்திட்டது. மனோகர் ஒவ்வொரு இரவுகளும் கண்விழித்து நன்றாகப்படித்தான். ஆனால், அவன் பாடசாலையில் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இதனால், பாடசாலையில் அவனுக்கு மாணவர்களிடம் வேறுபாடு காணப்பட்டது. அவனது வகுப்பில் படிக்கும் மாணவர்கள் அவனை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. அவனை கேலி செய்வதும் கிண்டல் செய்வதுமே அவர்களுக்கு வழக்கமானது. சுகமாக கழிய வேண்டிய அவனது பாடசாலை வாழ்க்கை ஏதோ தனிமையில் கழிந்தது. நண்பர்கள் என்று யாரும் இல்லை. வகுப்பில் ஒரு மூலையில் தனியாக உட்கார்ந்திருப்பான்.

பாடசாலை வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பினால் வீட்டின் வறுமையான சூழலும் படித்து நன்றாக சமுகத்தில் வரவேண்டும் என்று மனதில் ஓர் வேகம் கொண்டான். எத்தனை நாட்களாக அவன் ஒரு வேளை உணவிற்கே கஷ்டப்பட்டிருப்பான். புத்தகங்கள் வாங்கப் பணம் இல்லாமல் கண்ணீர் சிந்தி இருப்பான். அவன் படிப்பதற்காகப் படுகின்ற வேதனைகள், சோதனைகள் எல்லாம் அவனுக்கும் அவனது தாய்க்கும் மட்டுமே தெரியும்.


இவனெல்லாம் படித்து டாக்குத்தர் ஆனா... அவன் வகுப்பறைக்குள் நுழையும் போது மாணவிகளின் கேலிப் பேச்சு. ஆனால், ரிஷி மட்டும் பேசாமல் இருப்பாள். பெண்ணுக்கே உரிய சுபாவம் கொண்ட நல்ல குடும்பத்துப்பெண்தான் ரிஷி. உயர்தரம் படிக்கவந்த காலத்தில் ஒரு தடவையேனும் ரிஷி மனோகருடன் கதைத்திருக்க மாட்டாள். ஆனால், அவனிடத்தில் அவளுக்கு ஓர் ஈர்ப்பு. அதனை அவள் வெளிக்காட்டிக் கொள்வதில்லை.

பாடசாலை முடியும் நாட்களும் நெருங்கிவிட்டது. பரீட்சைக்குச் சில மாதங்களே இருந்தன. இதுவரை நாட்களும் ஏற்படாத ஓர் சலனம் மனோகரின் மனதில் ஏற்பட்டது. அன்று அவனால் படிக்க முடியவில்லை. அவனது சலனத்தில் சலனமில்லாத தேவதையாக தோன்றியவள் ரிஷி. 'என்ர நிலைக்கு இதெல்லம் சரிப்படுமா? சீ..அவள் காதலிக்கும் பெண்ணும் இல்லை' இவ்வாறு பல தடவை எண்ணிக்கொண்டான். மனோகர் தன் மனதுக்கு எப்படி கட்டளையிட்ட போதும் ரிஷி மனதை விட்டு அகலாமல் அவன் மனதில் ஓர் மூலையில் சிம்மாசனம் இட்டு அமர்ந்தாள்.

ரிஷியின் நினைவுகள் வரும்போதெல்லாம் மனோகர் தனக்காக தாய் செய்யும் தியாகங்களை எண்ணுவான். அவன் தாய் மீது கொண்ட பற்று அவன் சஞ்சலமில்லாமல் படிப்பதற்கு அடித்தளமாயிற்று. ஆயிரம் ஆயிரம் கனவுகளோடு அவன் கற்றான். அதன் பலனைத்தான் இன்று காணப் போகிறான். 'என்ன முடிவுகள் வெளியாகுதாம்?' தங்கையின் கேள்விக்கு தலையசைத்து விட்டு அவசர அவசரமாகக் குளித்துவிட்டுத் தாயிடம் விடைபெற்று வழியில் உள்ள கோயிலைத் தரிசித்துவிட்டு மிகுந்த நம்பிக்கையுடன் மிதிவண்டியை மிதித்தான். அவனது மனவேகம் வேகமாக அவனைப் பாடசாலைக்கு இழுத்துச் சென்றது.


பெயர்ப் பலகையில் அவனது பெயர் முதலாவதாக இருந்தது. மூன்று ஏ தரச்சித்திகள்.அது அவன் எதிர்பார்த்த ஒன்று தான். 'ஆனா ரிஷி ...' ரிஷியின் பெயரை அவனது கண்கள் தேடின. விவசாயத்துறையில் கற்பதற்கு அவளுக்கும் பல்கலைக்கழகம் கிடைத்திருந்தது. மனோகர் எதிரில் ரிஷி... இருவரது கண்களும் முதன்முறையாக மோதின. ரிஷி புன்னகைத்தாள். அந்த ஒரு புன்னகையே அவளது காதலைச் சொல்லாமல் சொல்லியது.

எதிர்காலக் கனவுகளுடனும் தன்னை செதுக்கிய சிற்பியான தன் தாயுடனும் தங்கையுடனும் ரிஷியை மனதிலே சுமந்தவனாக நகரத்தில் சென்று குடியேறினான். எதிர் வீட்டில் ரிஷியும் வந்து யன்னலோர நிலாவாக குடியேறினாள். மனோகரின் தூங்காத இராத்திரிகள் இனி சுகமான இராத்திரிகளே.



நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
'Saturday மெயில் சிறுகதை'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றை மாற்றிய பிரிட்டன் குழந்தை

200 ஆண்டு காலமாக நீடித்து நிலைத்து நின்ற மரபை அடியோடு புரட்டிப் போட்டிருக்கிறது ஒரு குழந்தை.

குழந்தை பிறந்தால் அதன் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் தாயினுடையதும் தந்தையுடையதும் பெயரைப் பதிவு செய்யும் மரபு 170 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது.

ஆனால், பிரிட்டனில் அண்மையில் கொண்டுவரப்பட்ட ஒரு (Human Fertilisation and Embryology Act 2008) சட்டம் ஒரு பால் உறவுப் பெற்றோரை பெற்றோரின் இடத்தில் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் குறிப்பிட வகை செய்கிறது.

இதன்படி கடந்த வருடம் ஏப்ரல் 1 இற்குப் பின்னர் கருக்கொண்ட குழந்தைகளுடைய ஒருபால் உறவுப் பெற்றோர் பிறக்கும் குழந்தையின் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் தாய் மற்றும் தந்தை என்பதற்குப் பதிலாக தாய் மற்றும் பெற்றோர் என்று தனது ஒரு பால் உறவு இணையைக் குறிப்பிட இந்தச் சட்டம் வகை செய்கிறது.

இச்சட்டத்தின் கீழ் பிரிட்டனில் பிறந்த முதல் குழந்தை லில்லி மே. லில்லி மே கடந்த மார்ச் 31 ஆம் திகதி பிறந்தாள். அவளுடைய தாய்மார்கள் நடாலி வூட்ஸ் [38 வயது] மற்றும் பெற்றி நொவெல்ஸ் [47 வயது] ஆவார். நடாலி வூட்ஸும் பெற்றி நொவெல்ஸும் 16 வருடங்களாக ஒரு பாலுறவுக்காரர்களாக இருந்து வருகிறார்கள். நடாலி வூட்ஸ் ஆண் ஒரு பாலுறவு மற்றும் பெற்றி ஒரு பாலுறவு குறித்த மருத்துவ ஆலோசகராகப் பணிபுரிந்து வருகிறார். பெற்றி நொவெல்ஸ் விநியோகச் சாரதியாகப் பணியாற்றுகிறார்.

6 வருடங்களாக இருவரும் இணைந்து வாழ்ந்தாலும் எட்டு வருடங்களுக்கு முன்னர் தான் அவர்களுக்கு ஒரு குழந்தை தேவையென்று உணர்ந்தார்கள்.

நாங்கள் இருவருமே தாயாராக விரும்பினோம். நடாலி வூட்ஸ் தான் தாயாராவது என்பதில் மிகத் தெளிவாக இருந்தார். இதனால், இலகுவாக எமக்கு முடிவெடுக்க முடிந்தது. அதேநேரத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சட்டம் நாம் இருவருமே சட்டப்படி பெற்றோராக இருக்க அங்கீகாரம் வழங்கியிருக்கிறது. அது பெற்றோராக வர விரும்பியிருந்த எம் இருவருக்குமே ஒரு வரப்பிரசாதமாக இருந்தது என்கிறார் பெற்றி நொவெல்ஸ்.

குழந்தை பெறுவதாக முடிவு செய்ததுமே நடாலி வூட்ஸ் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். குழந்தை பெறுவதற்காக விந்துதானம் செய்யும் விந்து வங்கியூடாக விந்தைப் பெற்று கருத்தரித்தார்.

விளைவாக கடந்த மார்ச் 31 இல் அழகான பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். முன்னைய சட்டங்களின்படி பெற்றோராக நடாலி வூட்ஸின் பெயர் மட்டுமே பிறப்புச்சாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால், பிரிட்டனில் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய சட்டத்தின்படி ஒரு பால் உறவினைக் கொண்ட இருவருமே சமமாக குழந்தையின் பெற்றோராக கணிக்கப்படுவர் என்பதால் இருவரது பெயர்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

நாங்கள் இருவருமே பெற்றோராக பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் கையொப்பமிட்டது மகிழ்ச்சியளிக்கிறது. நான் மட்டுமே சட்ட ரீதியான பெற்றோர் என்ற கவலையிலிருந்து இது என்னை விடுவித்திருக்கிறது என்கிறார் நடாலி வூட்ஸ்.

ஒரே பாலினத்தைச் சேர்ந்த எங்கள் இருவரது பெயர்களுமே பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதானது எங்களைப் போன்ற ஒரு பாலுறவுக் குடும்பங்களுக்கு மேலும் அங்கீகாரம் வழங்குவதாக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

ஒரு வரலாற்று முன்னுதாரணத்தை நாங்கள் உருவாக்க விரும்பினோம் என்றும் வூட்ஸ் வலியுறுத்துகிறார்.

பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் 170 வருடங்களுக்கு மேலாக இருந்து வந்த தாய் தந்தையரின் பெயரைக் குறிப்பிடும் வழக்கத்தை இது மாற்றியிருக்கிறது. தற்போதைய பிறப்புச் சாட்சிப் பத்திரமோ தந்தையுடைய பெயரை அதிலிருந்து விடுவித்து இருக்கிறது.

பிரிட்டனின் பிறிஜ்ரன் என்ற இடத்தைச் சேர்ந்த பிறப்புச் சாட்சிப் பத்திரப் பதிவு அலுவலகமோ புதிய சட்டத்தின் கீழான முதலாவது பதிவு இதுவெனச் சொல்கிறது.

குழந்தை லில்லி வளர்ந்ததும் நடாலி வூட்ஸை அம்மா என்று அழைப்பாள். பெற்றி நொவெல்ஸை அம்மா பி என்று அழைப்பாள். ஆனால், அப்பா என்று அவள் யாரையும் அழைக்கப் போவதில்லை.

லில்லிக்கு அப்பா என்றொருவர் இல்லாதது பற்றி நாங்கள் உரையாடினோம். ஆனால், ஒரு அப்பா ஒரு அம்மா என்பதை விட இதில் பல விடயங்கள் இருக்கின்றன. ஒரு குழந்தைக்கு அவசியமானது எந்த நிபந்தனைகளுமில்லாத அளவற்ற அன்பு. பெற்றியாலும் என்னாலும் அந்த அளவற்ற அன்பை லில்லிக்குக் கொடுக்க முடியும் என்கிறார் நடாலி வூட்ஸ்.

குழந்தைக்குத் தேவையானது பரிபூரணமான அன்பு. அதனை எங்கள் இருவராலும் கொடுக்க முடியும். ஆனால், துயரார்ந்த வகையில் சிலருக்கு இதனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால், தேவையற்ற பல அபிப்பிராயங்களை இங்கொன்றும் அங்கொன்றுமாக அவர்கள் உதிர்த்து விட்டிருக்கிறார்கள். எனது பெற்றோர் எனது பாலியல் தேர்வு காரணமாக என்னுடன் பேசுவதை நிறுத்தி விட்டார்கள். அவர்கள் ஒரு அற்புதமான அழகான குழந்தையின் தாத்தா இருக்கிறார்கள் என்றும் சொல்கிறார் நடாலி வூட்ஸ்.

இந்த நிலைமையால் குழந்தைக்கு பாட்டா பாட்டிமாருடைய உறவும் கிடைக்கப் போவதில்லை. துரதிர்ஷ்டவசமாக பெற்றி நொவெல்ஸின் பெற்றோரும் ஏற்கனவே இறந்து விட்டார்கள்.

இவர்கள் இச்சட்டத்தை வரவேற்றாலும் இவற்றை விமர்சிப்பவர்களும் இல்லாமல் இல்லை.

பிறப்புச்சாட்சிப்பத்திரம் குழந்தை எப்படி உருவாகியது என்பதை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறானால் உண்மையான தாயுடையதும் தந்தையுடையதும் பெயர்கள் அதில் குறுப்பிடப்பட்டிருக்கவேண்டும் என்கிறார். இனப்பெருக்க ஒழுக்கவியல் தொடர்பாகப் பணிபுரியும் ஜோசப்பின் குவான்ரவெளி.

பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள் இவ்வாறே வருமெனில் நாங்கள் கலாசாரத்தின் அனைத்து அம்சங்களையும் மறந்தவர்களாகி விடுவோம். அது மட்டுமல்லாமல் கலைச் சொற்களுடன் நாம் விளையாடுபவராகி விடுவோம். ஒருநாள் குழந்தை தனது தகப்பன் யார் என வினவும் போதும் குழந்தை எவ்வாறு பிறந்தது என்றும் உயிரியல் விளக்கும்.

அதற்கான வாய்ப்பு இங்கு இல்லாமற் போய்விடுகிறது என்றும் சுட்டிக்காட்டுகிறார் அவர்.

ஒவ்வொரு குழந்தைக்கும் தனது தந்தையை அறிந்துகொள்ள உரிமை இருக்கிறது.இந்தச்சட்டம் முதல் தடவையாக குழந்தைகள் தந்தை இல்லாமல் பிறக்க வகையேற்படுத்துகிறது.ஒரு தந்தை குழந்தையின் வாழ்வில் முக்கிய பாத்திரத்தை ஆற்றுகிறார். அதேபோல் குடும்பத்திலும் தந்தை ஒரு முக்கியமான பாத்திரத்தை ஆற்றுகிறார் என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.அது மட்டுமல்லாமல் சிறுவர்களுக்கு தமது உயிரியல் ரீதியான தந்தை யாரென அறிந்து கொள்ளும் உரிமையும் இருக்கிறது எனவும் அவர் வலியுறுத்துகிறார்.

தந்தையின் பெயரைக் குறிப்பிடாமலே ஒரே பாலினத்தைக் கொண்ட இருவர் பிறப்புச்சாட்சிப் பத்திரத்தில் ஒப்பமிடுவதைச் சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர் பரோனிஸ் டெச் வெளிப்படையாகவே கண்டிக்கிறார். குழந்தை தனது அடையாளத்தை அறிந்துகொள்ளும் உரிமையை இது பறிக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இது உண்மைத் தகவல்களை மறைக்கிறது. உயிரியல் சார்ந்த பெற்றோர் யார் என்று இனம்காண முடியாமல் குழப்பமடைய வைக்கிறது. அதுமட்டுமல்லாமல் சட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தவறான தகவல்களை இதுவழங்குகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

எவ்வாறாயினும் இந்தச் சம்பவம் குழந்தையின் பிறப்புச்சாட்சி பத்திரத்தில் அவர்களுடைய பிறப்புக்கு உயிரியல் ரீதியாகக் காரணமான இருவரது பெயர்களும் மிகச் சரியாகக் குறிப்பிடப்பட வேண்டும் எனக் குரலெழுப்பும் அழுத்தக் குழுக்களிடையே மிகுந்த கோபத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆனால் ஆண்,பெண் ஒரு பாலுறவு மற்றும் இருபாலுறவு தொடர்பான அமையத்தைச் சேர்ந்த ஸ்ரோன்வால் சட்டத்தில் ஏற்பட்ட இந்த மாற்றத்தினை வரவேற்றிருக்கிறார்.ஒரு பாலுறவுக்காரர்களுக்கு மிகவும் அவசியமாக இருந்த ஒரு சட்டமும் இதுதான் எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

லண்டன் பல்கலைக்கழகம் மற்றும் கிளாய்க் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒரு பகுதியான பேர்க்பெக் கல்லூரி நடத்திய ஆய்வில் ஆண், பெண் பெற்றோரை விட ஒரே பாலினத்தைச் சேர்ந்த தம்பதிகள் சிறந்த பெற்றோராக திகழ்வது தெரிய வந்துள்ளது. இதற்கு அடிப்படையான காரணம் என்னவென்றால் அவர்கள் தற்செயலாக குழந்தையை பெற்றெடுப்பதில்லை.குழந்தை ஒன்றை பெற்றெடுக்க விரும்பினால் அது தொடர்பாக தெளிவான திட்டவட்டமான முடிவை அவர்கள் எடுக்க வேண்டியிருக்கிறது.அதன் பின் அதற்காக விந்து வழங்குனர் ஒருவரையும் கண்டடைய வேண்டியிருக்கிறது என்று குறிப்பிடுகிறது.

இது தவிர மூன்றிலொரு பங்கு பிரிட்டிஷ் மக்கள் ஆண், பெண் தம்பதிகளை விட ஒரே பாலினத்தைச் சேர்ந்த பெற்றோர் சிறப்பானவர்கள் என்று நம்புவதாக பிரிட்டிஷ் சமூக நடத்தைகள் தொடர்பான வருடாந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.இவையெல்லாம் நடாலி வூட்ஸுக்கும் பெற்றி நோவெல்ஸுக்கும் ஆறுதல் தரக் கூடியவை.

குழந்தை தான் எவ்வாறு உருவாகினேன் என அறிய விரும்புவது அதனுடைய அடிப்படை உரிமை. இப்புதிய சட்டம் அதனை மறுக்கிறது என்ற குற்றச்சாட்டை நிராகரிக்கும் இச்சட்டத்திற்கு ஆதரவானவர்கள், லில்லிக்கு 18 வயதானதும் அவள் விரும்பினால் அவள் உருவாகக் காரணமான விந்தை யார் தானம் செய்தார்கள் என்று அறியும் உரிமை அவளுக்கு இருக்கிறது என்று சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆனால், அவர் விந்தை தானம் செய்த ஒருவர் என்பதற்கப்பால் நாங்கள் அவரைத் தந்தையாக நினைக்கவில்லை. அவர் அப்பா அல்ல. விந்து தானம் செய்த ஒருவர் அவ்வளவு மட்டுமே என்று கூறுகிறார் வூட்ஸ்.

**ஆனந்தத் தாண்டவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ருவென்றி-20' திருவிழா ஆரம்பம்

ICC WORLD TWENTY20 WEST INDIES 2010

உலகக்கிண்ண 20-20 கிரிக்கெட் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை மேற்கிந்தியாவில் ஆரம்பமானது. இந்தப் போட்டி குறித்த முக்கிய அம்சங்கள் வருமாறு;

**ஹப்பி பேர்த் டே:**




மேற்கிந்தியாவில் 17 நாட்கள் நடக்கவுள்ள 'ருவென்றி-20' உலகக் கிண்ணத் தொடரின் போது 7 கிரிக்கெட் வீரர்கள் பிறந்த நாள் கொண்டாடுகின்றனர். முதல் நாளான நேற்று இந்தியாவின் ரோகித் சர்மா தனது 23 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். மற்ற அணிகளில் போலார்ட் (12.05.1987), தென்னாபிரிக்காவின் போத்தா (02.05.1982), அவுஸ்திரேலியாவின் கிறிஸ்ரியன் (04.05.1983), டிர்க் நானஸ் (16.05.1976), இங்கிலாந்தின் ரவி போபரா (04.05.1983), சிம்பாப்வேயின் தைபு (14.05.1983) ஆகியோரும் உலகக் கிண்ணம் நடக்கும் நாட்களில் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர்.

**பாகிஸ்தான் ஆதிக்கம்:**

'ருவென்றி-20' உலகக் கிண்ண அரங்கில் அதிக வெற்றிகளைப் பெற்ற அணி என்ற பெருமை பெற்றுள்ளது பாகிஸ்தான். இதுவரை 14 போட்டிகளில் விளையாடியுள்ள பாகிஸ்தான் அணி 10 வெற்றி 3 தோல்விகளைப் பெற்றுள்ளது. ஒரு போட்டி ரை ஆனது.

இப்பட்டியலின் இரண்டாவது இடத்தில் தென்னாபிரிக்கா உள்ளது. 11 போட்டிகளில் இந்த அணி 9 வெற்றிகளைக் குவித்துள்ளது. வெற்றி சராசரியைப் பொறுத்த வரை பாகிஸ்தானைவிட தென்னாபிரிக்காவே அதிகம் சாதித்துள்ளது.

**அதிகம், குறைவு:**

'ருவென்றி-20' உலகக் கிண்ண அரங்கில் அதிக ஓட்டங்கள் குவித்த அணி என்ற பெருமை பெற்றுள்ளது இலங்கை. 2007 ஆம் ஆண்டு நடந்த முதல் உலகக் கிண்ணத் தொடரின் ஒரு போட்டியில் கென்யாவை எதிர்கொண்ட இலங்கை அணி 260 ஓட்டங்களைக் குவித்தது. இப்பட்டியலின் இரண்டாவது இடத்தில் இந்தியா (எதிர்- இங்கிலாந்து, 2007) உள்ளது.

2007 ஆம் ஆண்டு நடந்த தொடரின் ஒரு போட்டியில் நியூஸிலாந்தை எதிர்கொண்ட கென்யாஅணி 73 ஓட்டங்கள் எடுத்தது. இதுவே 'ருவென்றி-20' உலகக் கிண்ண அரங்கில் ஒரு அணி பதிவு செய்த குறைந்த பட்ச ஓட்டமாகும்.

'ருவென்றி-20' அரங்கில் இந்திய அணியின் குறைந்த பட்ச ஓட்டம் 118 (எதிர்-தென்னாபிரிக்கா, 2009)



**டில்ஷான் அசத்தல்:**

துவரை நடந்த இரண்டு 'ருவென்றி-20' உலகக் கிண்ணத் தொடர்களில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமை பெறுகிறார் இலங்கையின் டில்ஷான். 12 போட்டிகளில் விளையாடியுள்ள இவர், 3 அரைச்சதங்கள் உட்பட 382 ஓட்டங்கள் குவித்துள்ளார். இப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் இந்தியாவின் கம்பிர் (12 போட்டி, 375 ஓட்டங்கள், 4 அரைச்சதம்) உள்ளார்.

**உமர் குல் மிரட்டல்:**

'ருவென்றி-20' உலகக் கிண்ண வரலாற்றில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய வீரர் பாகிஸ்தானின் உமர் குல். 14 போட்டிகளில் பந்து வீசிய இவர் 26 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளார். இப்பட்டியலின் இரண்டாவது இடத்தில் பாகிஸ்தானின் அப்ரி (14 போட்டி 23 விக்) உள்ளார்.

**சங்ககார அபாரம்:**

'ருவென்றி-20' உலகக் கிண்ண அரங்கில் அதிக விக்கெட் வீழ்ச்சிக்குக் காரணமாக விக்கெட் காப்பாளர்கள் வரிசையில் இலங்கையின் சங்ககாரா முதலிடத்திலுள்ளார். இவர் 12 போட்டியில் 7 கேட்ச் மற்றும் 6 ஸ்ரம்பிங் உட்பட 13 விக்கெட் வீழ்ச்சிக்குக் காரமாக இருந்துள்ளார். இரண்டாவது இடத்தில் கம்ரான் அக்மல் உள்ளார். 14 போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 4 கேட்ச் மற்றும் 8 ஸ்ரம்பிங் செய்துள்ளார்.



**களத்தடுப்பு மிரட்டல்:**

தென்னாபிரிக்க வீரர் டிவிலியர்ஸ், 'ருவென்றி-20' உலகக் கிண்ண அரங்கில் அதிக கெட்ச் பிடித்த வீரராக உள்ளார். 11 போட்டிகளில் பங்கேற்றுள்ள இவர் 11 கெட்சுகள் பிடித்துள்ளார். இரண்டாவது இடத்தில் பாகிஸ்தானின் யூனிஸ்கான் (14 போட்டி, 8 கெட்ச்).


**சிறந்த ஜோடி:**

'ருவென்றி-20' உலகக் கிண்ண அரங்கில் முதல் விக்கெட்டுக்கு அதிக ஓட்டமெடுத்த ஜோடியாக மேற்கிந்தியாவின் கெய்ல்-டேவன் ஸ்மித் உள்ளது. 2007 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் இந்த ஜோடி 145 ஓட்டங்கள் எடுத்தது. இதுவே எந்த ஒரு விக்கெட்டுக்கும் [illegible] அதிகபட்ச ஓட்டமாகும். இந்தியா தரப்பில் சேவாக், கம்பிர் ஜோடி முதல் விக்கெட்டுக்கு அதிகபட்சமாக 136 ஓட்டங்கள் (எதிர்-இங்கிலாந்து, 2007) எடுத்துள்ளது.



**சிக்ஸர் யுவராஜ்:**

'ருவென்றி-20' உலகக் கிண்ண அரங்கில் அதிக சிக்ஸர் அடித்த வீரர் இந்தியாவின் யுவராஜ். 11 போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 21 சிக்ஸர்கள் விளாசியுள்ளார். இப்பட்டியலின் இரண்டாவது இடத்தில் மேற்கிந்தியாவின் கெய்ல் (7 போட்டி, 18 சிக்ஸர்) உள்ளார்.



**ஐ.பி.எல். பாதிப்பு ஏற்படுத்துமா?**

2009 இல் நடந்த 'ருவென்றி-20' உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியால் சாதிக்க முடியவில்லை. இதற்கு தென்னாபிரிக்காவில் நடந்த 2 ஆவது ஐ.பி.எல். தொடர்தான் முக்கிய காரணம். இதில் விளையாடியதால் நம்மவர்கள் சோர்ந்து போயினர். தவிர முன்னணி வீரர்களுக்கும் காயம் ஏற்பட்டது.




இதே போல இம்முறை ஐ.பி.எல். தொடர் முடிந்த ஐந்தே நாளில் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கச் சென்றுள்ளனர். இந்திய அணியில் இடம்பெற்றுள்ள ரவிந்திர ஜடேஜா தவிர மீதமுள்ள 14 பேர் ஐ.பி.எல். தொடரில் விளையாடியுள்ளனர். இதே போல தென்னாபிரிக்க அணியில் கிப்ஸ், கலிஸ் உள்ளிட்ட 11 வீரர்கள், இலங்கை அணியில் சங்ககார, ஜெயவர்தன உள்ளிட்ட 8 வீரர்கள் அவுஸ்திரேலிய அணியில் வற்சன், வார்னர் உள்ளிட்ட 7 வீரர்கள், இங்கிலாந்து அணியில் கொலிங்வூட், பீற்றர்சன் உள்ளிட்ட 5 வீரர்கள், நியூஸிலாந்து அணியில் மெக்கலம், வெட்டோரி உள்ளிட்ட 4 வீரர்கள், மேற்கிந்திய அணியில் கெய்ல், போலார்ட் உள்ளிட்ட 4 வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் விளையாடியுள்ளனர். பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், அயர்லாந்து, சிம்பாப்வே உள்ளிட்ட ஐந்து அணியில் உள்ள வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் விளையாடவில்லை.

மொத்தம் 45 நாட்கள் நடந்த ஐ.பி.எல். தொடரில் இந்திய வீரர்கள் 14 பேர் விளையாடியுள்ளனர். மிகுந்த சோர்வுடன் காணப்படும் இவர்கள் உலகக் கிண்ணத் தொடரில் சாதிப்பார்களா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'ருவென்ரி – 20' துளிகள்



**ஓராண்டுக்குள் மீண்டும் உலகக் கிண்ணம்;**

ரசிகர்களை பரவசப்படுத்தும் 20 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2 ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. ஆனால், 2 ஆவது உலகக் கிண்ணப் போட்டிக்கும் தற்போதைய போட்டிக்கும் வெறும் 10 மாதங்கள் மட்டுமே இடைவெளியாகும்.

அதற்குக் காரணமும் உண்டு. ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் 2008 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடப்பதாக இருந்தது. பின்னர் அது பாதுகாப்பு பிரச்சினையால் ஓராண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டு கடைசியில் கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்தது. இதன் காரணமாக 2010 ஆம் ஆண்டு நடப்பதாக இருந்த சாம்பியன்ஸ் கிண்ண வாய்ப்பு ரத்தானதால் அதனை ஈடுகட்டும் வகையில் 20 ஓவர் உலகக் கிண்ணத்தை நடத்தும் வாய்ப்பை ஐ.சி.சி. அந்த நாட்டுக்கு வழங்கியது.

**பாதியில் தாயகம் திரும்ப பீற்றர்சன் முடிவு:**

இங்கிலாந்து அணியின் முக்கியமான அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன். ஆனால், உலகக் கிண்ணத்தின் இறுதிக் கட்டத்தில் அவர் அணியுடன் இருக்கமாட்டார். அவரது மனைவி ஜெஸ் தற்போது நிறை மாத கர்ப்பிணியாக இருக்கிறார். மே முதல் வாரத்தில் குழந்தை பிறக்கும் என்று டாக்டர்கள் கூறியிருப்பதால், முதலாவது குழந்தை பிறந்த உடன் தாயகம் திரும்ப அவருக்கு இங்கிலாந்து அணி நிர்வாகம் அனுமதியளித்துள்ளது.

**ஆப்கான் அணியின் சேவாக்:**

இந்தியாவை தொடக்க ஆட்டத்தில் சந்திக்கவுள்ள புதுமுக அணியான ஆப்கானிஸ்தான் வீரர்கள் தங்களது ஹீரோவாக பாவிப்பது இந்திய வீரர்களைத் தான். ஆப்கான் அணியின் தொடக்க ஆட்டக்காரர் கரீம் சாதிக், 2004 ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆப்கான் அணிக்காக இந்தியாவில் ஆடிய போது மொகாலியில் நடந்த ஆட்டத்தில் சதமடித்ததுடன் 6 சிக்ஸரும் விளாசினார். அப்போது அவரை இந்திய சிறுவர்கள் காபூலின்சேவாக்என்று அழைக்கத் தொடங்கினர். இப்போது அவரது செல்லப் பெயரும் இது தான். சேவாக்கின் அனைத்து இனிங்ஸ்களினதும் வீடியோ காட்சிகளையும் தனது லப்டொப்பில் வைத்திருக்கும் இவர், உலகக் கிண்ணப் போட்டியின் போது அவரிடம் ஆட்டோகிராப் வாங்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால், காயத்தால் சேவாக் விலகியதால் ஏமாற்றமடைந்துள்ளார்.

ஆப்கான் விக்கெட் காப்பாளர் முகமது ஷாஸத் எம்.எஸ்.தோனியின் தீவிர ரசிகர். ஷாஸத்தை எம்.எஸ். என்றே கூப்பிடுகிறார்கள். ஆப்கான் துடுப்பாட்ட வீரர் முகமது நபியை அவ்வணி வீரர்கள் யுவராஜ் என்று அழைக்கிறார்கள். தனது ஹீரோவான யுவராஜ்சிங்கின் படங்களை நிறையச் சேகரித்து வைத்திருக்கிறார். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் நபி வலதுகை துடுப்பாட்ட வீரர். இதேபோல் சகீர்கான், யூசுப்பதானுக்கும் ஆப்கானில் மவுசு அதிகம். அந்த அணியின் இடக்கை வேகப்பந்து வீச்சாளர் ஷாபூர் ஸத்ரனை சகீர்கான் என்று செல்லமாக அழைத்து சந்தோஷப்பட்டுக் கொள்கிறார்கள்.

# யாருக்கு வாய்ப்பு?

ஐ.பி.எல். அதிரடி முடிந்த ஒரு சில நாட்களுக்குள் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 'ருவென்ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா உள்ளிட்ட 12 அணிகள் கிண்ணத்தை வெல்ல பலப்பரீட்சை மேற்கொள்கின்றன. விண்ணை எட்டும் சிக்ஸர், சுப்ப பவுண்டரிகள், 'திரில்' வெற்றிகள் என மற்றுமொரு கிரிக்கெட் விருந்து ரசிகர்களுக்குகாத்திருக்கிறது.

கிரிக்கெட் அரங்கில் விஸ்வரூப வளர்ச்சி கண்ட 'ருவென்ரி-20' போட்டிகள் மூன்றாவது உலகக் கிண்ணத் தொடரை எட்டியுள்ளது. நேற்று ஆரம்பமான இப்போட்டிகள் மே 16 ஆம் திகதி வரை நடக்கின்றன. முன்னாள் சாம்பியன்களான இந்தியா (2007), பாகிஸ்தான் (2009) மற்றும் அவுஸ்திரேலியா, இலங்கை அணிகள் கிண்ணத்தை கைப்பற்றும் வாய்ப்புள்ள அணிகளாகக் களமிறங்குகின்றன.

**அதிரடி எழுச்சி:** கிரிக்கெட்டின் மூன்றாவது பரிமாணமமான 'ருவென்ரி-20' போட்டிகளை அறிமுகப்படுத்திய பெருமை இங்கிலாந்தை சேரும். 2003 ஆம் ஆண்டு இப்போட்டிகள் அறிமுகமாயின. ஆரம்பத்தில் இதற்கு உலகின் மற்ற அணிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. ஆனால், ரசிகர்களின் பேராதரவுடன் மிக விரைவில் இப்போட்டிகள் ஐ.சி.சி. அட்டவணையை எட்டின.

2005 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகள் 'ருவென்ரி-20' போட்டியில் மோதின. இது தான் ஐ.சி.சி. அட்டவணையில் இடம்பெற்ற முதல் சர்வதேசப் போட்டி. அதற்குப் பின் அதிரடி எழுச்சி கண்டு இவ்வகைப் போட்டிகளின் முதல் உலகக் கிண்ணத் தொடர் 2007 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்தது. அதற்குப் பின் இரண்டாவது உலகக் கிண்ணம் 2009 ஆம் ஆண்டு லண்டனில் நடந்தது. தற்போது மூன்றாவது உலகக் கிண்ணத் தொடர் நடக்கவுள்ளது.

**புதிய அணிகள்:**

இந்த முறை மொத்தம் 12 அணிகள் உலகக் கிண்ணத்தில் மோதவுள்ளன. கடந்த உலகக் கிண்ணத்தில் (2009) இடம்பெற்றிருந்த ஸ்கொட்லாந்து, நெதர்லாந்து அணிகள் இந்த முறை தகுதிச் சுற்றில் தோல்வியடைந்து வெளியேறிவிட்டன. புதியதாக ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே அணிகள் வாய்ப்புப் பெற்றுள்ளன. இவை தவிர, வழக்கம் போல டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்தியா, நியூஸிலாந்து, இலங்கை, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளும் அயர்லாந்து அணியும் கிண்ணத்தை வெல்லப் போராடவுள்ளன.

**போட்டி முறை:**

மொத்தம் உள்ள 12 அணிகள் 'குரூப்' 'ஏ', 'பி', 'சி' மற்றும் 'டி' என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் தலா 3 அணிகள் இடம் பெற்றுள்ளன. 'குரூப்' போட்டிகளில் ஒவ்வொரு அணியும் தனது பிரிவில் இடம் பெற்றுள்ள மற்ற 2 அணிகளும் தலா ஒருமுறை மோதும்.

போட்டிகளின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் 'சுப்பர்-8' சுற்றுக்கு முன்னேறும். இதில் இடம் பெறவுள்ள 8 அணிகள் குரூப் 'ஈ' மற்றும் 'எப்' பிரிவுகளாகப் பிரிக்கப்படும். இதில் ஒவ்வொரு அணியும் தனது பிரிவில் இடம்பெற்றுள்ள மற்ற 3 அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மற்றும் இரண்டாவது இடத்தில் வரும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். இதில் வெற்றி பெறும் அணிகள் இறுதியாட்டத்துக்கு முன்னேறும். அதிகபட்சமாக வெற்றிபெற்று முன்னேறும் அணி 7 போட்டிகளில் மோதும்.

**யாருக்கு வாய்ப்பு?:**

முன்னாள் சாம்பியன் என்ற முறையில் இந்த முறை கிண்ணத்தை வெல்ல இந்திய அணிக்கு வாய்ப்புள்ளது. தற்போதைய சாம்பியன் பாகிஸ்தானையும் குறைத்து மதிப்பிட முடியாது. ஒருநாள் போட்டிகளில் உலக சாம்பியனான அவுஸ்திரேலியா அணி இதுவுரை ருவென்ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்துக்குக் கூட முன்னேறியதில்லை. இதனால் இந்த முறை கிண்ணத்தை வெல்ல தீவிரம் காட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.




தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, இலங்கை அணிகளும் கிண்ணத்தை வெல்ல வாய்ப்புள்ள அணிகளாகக் கருதப்படுகின்றன. சொந்த மண்ணில் தொடரை நடத்துவதால் மேற்கிந்தியாவுக்குச் சாதகமான சூழ்நிலையும் உள்ளது.

**அதிரடி விருந்து:**

சமீபத்தில் தான் இந்தியாவில் ஐ.பி.எல். 'ருவென்ரி-20' தொடர் முடிந்தது. இத்தொடரில் அசத்திய இந்தியாவின் ரெய்னா, முரளி விஜய், பேலார்ட், தென்னாபிரிக்காவின் கலீஸ், அவுஸ்திரேலியாவின் வார்னர், வற்சன் ஆகியோரது அதிரடி விளாசலை மீண்டும் ஒருமுறை கிரிக்கெட் ரசிகர்கள் காண ஆவலாகவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் சூடுபிடித்துள்ள தேர்தல் பிரசாரம் விவாதங்களில் எதிர்க்கட்சி தலைவர் முன்னிலையில்

பிரிட்டனில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இறுதித் தொலைக்காட்சி விவாதத்தில் எதிர்க்கட்சியான கன்சவேடிவ் கட்சியின் தலைவர் டேவிட் கமரன் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரசாரங்கள் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ள நிலையில் இது அவருக்குப் புது உத்வேகத்தை அளித்துள்ளது.

பொருளாதாரத்தை மையப்படுத்தி நடைபெற்ற இவ்விவாதத்தில் எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குத் தகுந்த நபர் தானே என வாக்காளர்களை நம்ப வைக்கும் முயற்சிகளை பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுண் மேற்கொண்டுள்ளார்.

இவ்விவாதத்தில் பிரதான அரசியல் கட்சித் தலைவர்களான பிறவுண், கமரன் மற்றும் லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைவர் நிக் கிளெக் ஆகியோர் பங்குபற்றினர்.

ஏற்கனவே வெளியிடப்பட்டு வரும் ஆய்வு முடிவுகள் தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கான சாத்தியங்களை வெளிப்படுத்தவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தின விவாதத்தில் யார் வெற்றியாளரெனத் தீர்மானிப்பதற்காக மக்களின் கருத்தையறிய சன் பத்திரிகையினால் நடத்தப்பட்ட ஆய்வில் கமரன் 41 வீத ஆதரவையும் கிளெக் 32 வீத ஆதரவையும் பிறவுண் 25 வீத ஆதரவையும் பெற்றுள்ளனர்.

மற்றைய இரு செய்தி நிறுவனங்கள் நடத்திய ஆய்விலும் கமரனுக்கும் கிளெக்கிற்குமிடையில் 38 வீதத்தில் கடும் போட்டி நிலவியபோதும் பிறவுண் 25 வீத ஆதரவையே பெற்றுள்ளார்.




தேர்தலை முன்னிட்டு நடத்தப்பட்ட 3 விவாதத்திலும் கமரனின் ஆளுமை சிறந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். இவ்விவாதத்திற்கு முன்னதாக புதன்கிழமை பிரசார நடவடிக்கையொன்றில் பிறவுணின் கொள்கைகள் தொடர்பில் கேள்விக்கணைகளைத் தொடுத்த வாக்காளரொருவரை குறுகிய மனப்பான்மை கொண்டவரென பிறவுண் விமர்சித்தமை ஒலிப்பதிவுக் கருவியில் வெளியாகியதைத் தொடர்ந்து பெரும் சர்ச்சை எழுந்தது.

இதன்பின்னர் அவ்வாக்காளரை பிறவுண் நேரில் சந்தித்து மன்னிப்புக் கோரியதற்கு மத்தியிலேயே இவ் விவாதம் இடம்பெற்றது. பிரதமர் பதவியை ஏற்பதற்கு முன்பு ஒரு தசாப்த காலமாக நிதியமைச்சராகப் பதவி வகித்த அனுபவம் வாய்ந்தவரான பிறவுண் இவ் விவாதத்தில் இவ்வருட வரவு–செலவுத் திட்டப் பற்றாக்குறையை இரத்து செய்யும் கன்சவேடிவ் கட்சியின் திட்டம் நாட்டைப் பொருளாதார வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லுமென எச்சரித்துள்ளார்.

மேலும், நல்ல தருணத்திலும் கெட்ட தருணத்திலும் பொருளாதாரத்தை எவ்வாறு கொண்டு செல்வது என்பதை நான் அறிவேன். வங்கிகள் செயலிழந்தபோது நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை நான் எடுத்திருந்தேன் எனவும் தன்னை நியாயப்படுத்தியுள்ளார்.

மொத்தத் தேசிய உற்பத்தியில் 11 வீத பற்றாக்குறையுடன் போராடும் பிரிட்டனின் பொருளாதாரம் தேர்தலில் மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

பிரிட்டிஷ் அரசியலில் புதியதாகக் கருதப்படும் அமெரிக்க பாணியிலான இம்மூன்று தொலைக்காட்சி விவாதங்களிலும் கிளெக் முக்கியமானதொரு இடத்தைப் பிடித்துள்ளார்.

பல வாரங்களாக வெளியிடப்பட்டு வரும் ஆய்வு முடிவுகளில் கன்சவேடிவ் கட்சி முன்னணியிலுள்ள போதும் பாரம்பரிய கட்சிகளின் பெரும்பான்மைப் பலத்தை முறியடிப்பதற்குப் போதுமான வாக்குகளை கிளெக் தலைமையிலான லிபரல் ஜனநாயகக் கட்சி பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், வரிகள், வங்கித்துறை, பிரிட்டனின் தயாரிப்பு, கைத்தொழிலின் வீழ்ச்சி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் மூன்று தலைவர்களும் கடுமையாக விவாதித்துள்ளனர்.

இவ்விவாதத்தில் பொருளாதார விவகாரம் தொடர்பில் பிறவுணை கடுமையாகச்சாடிய கமரன் பிறவுணும் அவரது அரசாங்கமும் கிரேக்கத்தைவிட பெரியதொரு பொருளாதார நெருக்கடிக்கு நாட்டைக் கொண்டு செல்வதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், 13 வருட தொழில் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்தால் பிரிட்டனுக்குப் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கித் தருவதாகவும் கமரன் உறுதியளித்துள்ளார்.

சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

## உலகின் செல்வாக்குமிக்க 100 பேரின் பட்டியலில் ஹிலாரிக்கு இடமில்லை

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் மற்றும் பொப் பாடகி லேடிககா ஆகியோருக்குள்ள செல்வாக்கு வெளிவிவகாரச் செயலர் ஹிலாரி கிளின்டனுக்கு இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் செல்வாக்குமிக்கவர் பட்டியலை தரப்படுத்துவதற்காக ரைம்ஸ் சஞ்சிகையால் நடத்தப்பட்ட வாக்கெடுப்பைத் தொடர்ந்தே ஹிலாரி கிளின்டன் இவ்வாறு செல்வாக்குக் குறைந்தவராக உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

உலகின் அதிக செல்வாக்குமிக்கவர்கள் 100 பேரை தெரிவு செய்வதற்காக ரைம்ஸ் சஞ்சிகையால் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் இலட்சக்கணக்கானவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அமெரிக்க குடியரசுக் கட்சியின் முன்னாள் துணை ஜனாதிபதி வேட்பாளர் சாரா பாலின், தென்கொரிய ஸ்கேட்டிங் சம்பியன் கிம் யு–நா, அப்பிள் நிறுவன தலைமை நிறைவேற்று அதிகாரி ஸ்ரீவ் ஜொப்ஸ், பிரேஸில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலாடா சில்வா ஆகியோரும் உலகின் செல்வாக்குமிக்க 100 பேர் பட்டியலில் உள்ளடங்கியுள்ளனர்.

ரைம்ஸினால் நடத்தப்பட்ட மற்றொரு இணையத்தள வாக்கெடுப்பின் மூலம் ஈரான் எதிர்க்கட்சித் தலைவர் மிர் ஹொசைன் மௌசவி 8 இலட்சம் வாக்குகளைப்பெற்று வெற்றியாளராகியதால் அவரும் 100 பேர் வரிசையில் முக்கியமானவர்களின் இடத்திலுள்ளார்.

ஆனால், இத்தரப்படுத்தல் அதிக செல்வாக்குள்ளவரைத் தெரிவு செய்யவில்லை. அது ரைம்ஸ் சஞ்சிகையின் சிரேஷ்ட ஆசிரியர் குழு மத்தியிலேயே தங்கியுள்ளது.

இந்நிலையில், ரைம்ஸ் சஞ்சிகையின் தரப்படுத்தலில் கன்சர்வேட்டிவ் கட்சியின் பிரமுகர்களான செனட்டர் ஜோன் கில், வர்ணனையாளர் கிளென் பெக், ஜென்னி பெத் மார்ட்டின், சபாநாயகர் நான்சி பெலோசி ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



# பாரம்பரிய இடங்கள் பாதுகாக்கப்படுமா?

உலகம் அறிவியல், தொழில்நுட்பம் என்ற ரீதியில் முன்னேற்றமடைந்து அனைத்திலும் புதுமைகள் புகுத்தப்படுகின்ற போதிலும் சில விடயங்களில் பழைமைகள் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டே வருகின்றன. அந்த வகையில் ஒவ்வொரு நாடும் தத்தமது நாட்டின் தொன்மை மற்றும் வரலாற்றிற்கு ஆதாரமான கலாசார பாரம்பரிய இடங்களைப் பாதுகாத்து வருகின்றன. அவற்றைப் பாதுகாக்கவென அமைச்சு, திணைக்களம் என்பன அமைக்கப்பட்டு அவற்றிற்கு நிதி ஒதுக்கி அவ்விடங்களை மிகுந்த சிரத்தையுடன் பாதுகாக்கின்றனர்.

இவ்வாறான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலாசார பாரம்பரிய இடங்கள் நாட்டின் தொன்மையையும் சிறப்பையும் வெளிப்படுத்துவதாக அமைவதுடன், சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து அதனூடாக அந்நியச் செலாவணியையும் பெற்றுத் தருவதாகவும் அமைகின்றன.

அந்தவகையில் எமது முன்னோர் தந்து சென்ற வெகுமதிகளாய் பல வரலாற்று பாரம்பரிய இடங்கள் நமது நாட்டிலும் உள்ளன. சிகிரியா, பொலநறுவை, அநுராதபுரம், தம்புள்ளை, காலி என்று பல புராதன வரலாற்றிடங்கள் நம் நாட்டிலும் பாதுகாக்கப்பட்டு சுற்றுலாத் தலங்களாக உள்ளன.

இதேவேளை, நம் நாட்டின் இன்னோர் முக்கியமான வரலாற்று பாரம்பரிய இடம் தேடுவாரற்ற நிலையில் பாழடைந்து போயுள்ளது. பொக்கிஷமாய்ப் பாதுகாக்கப்பட வேண்டிய இப்பகுதி, முற்றாக சிதைந்து நிர்மூலமாகி விடுமோ என்ற அச்சம் ஏற்படுத்தும் வகையில் பரிதாபமாய்ச் சாட்சியளிக்கின்றது.

இந்நிலை வடபகுதியிலுள்ள வரலாற்றுப் பாரம்பரிய இடங்களுக்கே ஏற்பட்டுள்ளன. இதன்படி, யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னனான சங்கிலியனின் மாளிகை அமைந்திருந்த இடமெனக் கருதப்படும் சங்கிலியன்




தோப்பு, இதனுடன் அண்டியுள்ள சங்கிலியன் தோரண வாயில், கூழங்கை சக்கரவர்த்தி காலத்து எனக் கருதப்படும் யமுனா ஏரி, அக்கால அமைச்சர் ஒருவரின் இருப்பிடமாக கருதப்படும் மந்திரிமனை மற்றும் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கோட்டை, அதன் அகழி போன்ற பகுதிகளே இத்துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளன.



இந்த அரிய பொக்கிஷங்கள் இன்று குப்பை மேடுகளாய் சாட்சியளிக்கின்றன. இப்பகுதிகள் அங்குள்ள மக்களின் குப்பைகளை கொட்டுமிடமாகவே பயன்படுகின்றன. இதனால் இவ்விடங்கள் மேலும் சிதைந்து போகவும் ஏரி மற்றும் கோட்டை அகழி போன்றன தூர்ந்து போகவும் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்க வேண்டிய இடத்தில் குப்பைகளை கிளறி உண்பதற்காக மாடுகளும், நாய்களும் காக்கைகளுமே கூடியுள்ளன.

இதேவேளை, அந்நியருக்கு எதிராக போராடி இறுதியில் பிரித்தானியரால் 1803 ஆம் ஆண்டில் வீழ்த்தப்பட்ட பண்டார வன்னியனின் நினைவாக அவன் எதிரிகளாலேயே கற்சிலைமடுவில் நிறுவப்பட்ட நினைவுக் கல்லும் தற்போது உடைக்கப்பட்டுள்ளதாக அண்மைய செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் தொல் பொருள் ஆய்வுகள் இடம்பெறும் வேலணை சாட்டி எனுமிடத்தில் மண் அகழ்வுகளும் இடம்பெறுகின்றன. இதுவும் அத்தொல் பொருள் அகழ்வுக்கு பாதகமாக அமையக் கூடிய செயலே.



இந்நிலையில் வடபகுதியிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களைப் பேணி பாதுகாக்க வடமாகாண தொல் பொருள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அத்திணைக்கள உத்தியோகத்தரொருவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் தற்போது யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியை துப்புரவு செய்து புனரமைக்கும் நடவடிக்கைகள் நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதேவேளை, வேலணை சாட்டி பகுதி மண் அகழ்வை தடுக்கவும் கோட்டை பகுதியில் போடப்பட்ட குப்பைகளை அகற்றி அவ்விடத்தை துப்புரவு செய்யவும் நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த 3 தசாப்தங்களாக நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இத்திணைக்களத்தின் பணிகள் வடபகுதியில் ஸ்தம்பித்தே இருந்தன. நாட்டு சூழ்நிலை சீரானதைத் தொடர்ந்து இப்பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் நீண்ட காலமாக இவை பேணப்படாமையால் சீரமைப்பு பணிகள் துரிதப்படுத்தப்படாவிடின் பாதகமாகவே அமையும்.

இவ்வரலாற்று பாரம்பரிய இடங்கள் தமிழருக்கானது மட்டுமன்றி முழு இலங்கைக்குமான சொத்துகளே. இவற்றைப் பேணி பாதுகாப்பது அனைவரதும் கடமை. இதுவரை காலமும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முட்டுக்கட்டையாக காரணங்காட்டப்பட்ட யுத்தம் இன்று முடிவுக்கு வந்து விட்டது. அதனையடுத்து புதிய அரசாங்கமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அனைத்து பணிகளையும் புதிய மாற்றங்களுடனும் வினைத்திறனுடனும் ஆரம்பிக்கலாம்.

எனவே, இதுவரை நாட்டிலுள்ள புராதன பாரம்பரிய சுற்றுலாத்தலங்களுக்கு நிகராக இதனையும் பேணிப் பாதுகாத்து வளப்படுத்தும் நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்படுதல் முழு நாட்டிற்குமே பயனளிக்கும்.

இதேவேளை, அவ்வப்பகுதி மக்களும் அவ்விடங்களின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் உணர்ந்து அவற்றை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எம்.தயானி

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் [illegible] இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 01ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org